தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

07.06.2013 A.M

## வீணாகும் உணவு!

உலக சுற்றுச்சூழல் நாள் ஜூன் 5-ஆம் தேதி கொண்டாடப்பட்டது. நிகழாண்டு முழக்கம் - "சிந்திப்பீர் - உண்பீர் - சேமிப்பீர்: உணவு வீணாவதைக் குறைப்பீர்' என்பதுதான்.

உலக அளவில் 1.3 பில்லியன் டன் உணவு தானியங்கள், பழங்கள், காய்கறிகள் விளைநிலத்திலிருந்து சந்தைக்கு வந்து, நுகர்வோரிடம் சேரும் முன்பாகவே அழுகிவிடுகின்றன. இந்தியாவைப் பொருத்தவரை, 2009 கணக்கெடுப்பின்படி, 230 லட்சம் டன் உணவு தானியங்கள், 120 லட்சம் டன் பழங்கள், 210 லட்சம் டன் காய்கறிகள் வழியிலேயே அழுகிப்போகின்றன.

இதனால் வியாபாரிக்கு இழப்பு கிடையாது. வழித்தடத்தில் எந்த அளவுக்கு அழுகி வீணாகிறதோ அந்த அளவுக்கு அதே தானியம் - பழம் - காய்கறிக்கான விலையை ஏற்றித்தான் விற்கிறார். விளையும் இடத்தில் விவசாயிக்கான பணமும் தரப்பட்டு விடுகிறது. கூடுதல் விலை கொடுக்கிறார்கள் என்பதால் இதை நுகர்வோருக்கு இழப்பு என்று சொன்னாலும், உண்மையில் இந்த விளைபொருள் வீணாவதால் ஏற்படும் இழப்பு சுற்றுச்சூழல் சார்ந்தது. நம் கண்ணுக்குப் புலனாகாதது.

ஏனென்றால், ஒரு கிலோ கோதுமை அல்லது அரிசியை உற்பத்தி செய்ய அந்தத் தாவரம் சுமார் 1,300 லிட்டர் தண்ணீரை மண்ணிலிருந்து உறிஞ்சுகிறது. ஒரு தக்காளி, 15 லிட்டர் தண்ணீரை உறிஞ்சுகிறது. இந்த "உறிநீர்'அளவு (வெர்ச்சுவல் வாட்டர்) எல்லாவற்றுக்கும் பொருந்தும். ஒரு டம்ளர் ஆப்பிள் ஜூஸ்க்கு உறிநீர் அளவு 190 லிட்டர் தண்ணீர்! ஆகவே இந்த விளைபொருள்கள் வீணாவது மண்ணுக்குப் பெரும் இழப்பு. ஒரு தக்காளி வீணாகிறபோது, 15 லிட்டர் தண்ணீர் வீணடிக்கப்பட்டுவிட்டது என்று பொருள்.

மண்ணின் நீர்வளத்தை நாம் வீணடிக்கிறோம். இதை வியாபாரியும், விவசாயியும் கணக்கில் கொள்வதில்லை.

காய்கறிகளுக்கு ஆவதைக் காட்டிலும் இறைச்சிக்கு அதிகத் தண்ணீர் உறிஞ்சப்படுகிறது. ஒரு கிலோ கோழிக்கறிக்கு 3,900 லிட்டர் உறிநீர். ஒரு கிலோ மாட்டுக்கறிக்கு உறிநீர் 15,500 லிட்டர்!

இவ்வாறு விளைநிலத்திலிருந்து வியாபாரிக்கும் நுகர்வோருக்கும் வரும் வழியில் விளைபொருள்கள், மாமிசம் அழுகுவதைத் தடுப்பது தனிமனிதருக்கு சாத்தியமல்ல. இது அரசு செய்ய வேண்டிய வேலை. தேவையான குளிர்ப்பதனக் கிடங்குகளை உருவாக்குவதும், போக்குவரத்துக்கான சரியான சாலைகள் அமைப்பதும் அரசின் கடமை.

உணவு தானியங்கள், இறைச்சி நமக்குக் கிடைத்த பிறகு இதை நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம், உண்கிறோம் என்பதில்தான் தனிமனிதனுக்கு பொறுப்பு வந்து சேர்கிறது. உணவுப் பொருள் வீடுகளில் வீணாவதைக் காட்டிலும், பொது விருந்துகளிலும், ஓட்டல்களிலும் வீணாவது மிகமிக அதிகமாக இருக்கிறது.

திருமண விருந்துகளில் பெரும்பாலும் இலையில் அனைத்து உணவு வகைகளையும் பரிமாறிவிட்டுத்தான் விருந்தினர்களை உள்ளே தள்ளிவிடுகிறார்கள். சர்க்கரை நோய் உள்ளவர் இனிப்புகளையும் உருளைக்கிழங்கையும் தொட மாட்டார். சிலர் சில காய்கறிகளைத் தொடவே மாட்டார்கள். இது தவிர ஒவ்வொரு இலையிலும் ஒதுக்கப்படும் மிச்ச சோறு... என வீணாகும் உணவுப் பொருள்களின் அளவு மிக அதிகம்.

இதுபோன்று ஓட்டல்களிலும் உணவு வீணடிக்கப்படுவது அதிகமாக இருக்கிறது. தற்போது இந்திய நகரங்கள் அனைத்திலும் அதிக எண்ணிக்கையில் திறக்கப்படும் கடைகள் உணவுக்கூடங்களாக இருக்கின்றன. குறிப்பாக அசைவ உணவகங்களே அதிகம். ஒரு நபரின் வயிறு நிரம்பும் அளவுக்கான உணவை விற்பதைக் காட்டிலும், இவர்கள் அதிக விலைக்கு அதிக அளவு உணவை விற்கும் சூழ்நிலைகளே இருக்கின்றன. உணவுக்கூடங்களுக்கு வியாபார லாபம் மட்டுமே முக்கியம்.

இரண்டு இட்லிக்கு சாம்பாருடன் ஐந்து வகை சட்னி, மிளகாய்ப் பொடி. இத்தனை சட்னியையும் சாப்பிடுவோர் எண்ணிக்கை மிகக் குறைவு. ஆனாலும் தரப்படுகிறது. ஏனென்றால் அதற்கான விலை அதில் அடங்கியுள்ளது என்பதால்தான். ஆனால் உணவுப் பொருள் வீணாகிறது.

இரண்டு "நான்' வாங்கினால், ஒரு பன்னீர் மசாலா அல்லது சென்னா மசாலா ஒரு கிண்ணம் வாங்கியாக வேண்டும். ஏனென்றால் அதில்தான் அவர்களது லாபம் இருக்கிறது. பிரியாணி என்று கேட்டால், ஒரு பிளேட் தருவார்கள். ஒரு நபருக்கான தேவை என்பதைக் காட்டிலும், ஒரு நபருக்கான வியாபாரம் என்று கணக்கிடுவதால்தான், ஓட்டல்களில் உணவுப் பொருள், சிறிதுசிறிதாக வீணாகிக்கொண்டே இருக்கிறது.

இந்தியாவில் தனிமனிதரால் உணவு வீணாக்கப்படுவது என்பது மிகவும் குறைவுதான். பெரும்பாலான வீடுகளில் உணவு போதவில்லை என்பதுதான் பிரச்னையே தவிர, உணவுப் பொருள் மிச்சமாகி, வீணாவது என்பது மிக அரிது.

எந்தவொரு சத்துணவுக்கூடத்திலும் உணவு வீணாகியதால் கொட்டப்படும் சூழ்நிலை ஏற்படுவதே இல்லை. குழந்தைகள் உணவைச் சிந்துவதாலும், உண்ணும்போது சிதறுவதாலும் ஏற்படும் இழப்பைத் தவிர, சாப்பாடு வீணாகிப்போகும் நிலைமை கிடையாது.

இந்தியாவைப் பொருத்தவரை, தனிமனிதரைக் காட்டிலும், இந்த உணவுப்பொருள் வீணாவதைத் தடுக்கும் பொறுப்பு அரசுக்கும், உணவுக்கூடங்களுக்கும் மிக அதிகம்.

தனிமனிதனாக இந்தியர் இந்த மண்ணுக்கு நன்மை செய்ய விரும்பினால் அசைவ உணவைத் தவிர்ப்பது மிக எளிதாக செய்யக்கூடியதாக இருக்கும். ஒரு வேளைக்கான சைவ உணவு சாப்பாட்டின் உறிநீர் அளவு 1,200 லிட்டர். ஆனால் அசைவ உணவுக்கு 16,000 லிட்டர். நாம் சைவ உணவுக்கு மாறுவதால், நம் உடலுக்கு மட்டுமல்ல, மண்ணின் நீர்வளத்துக்கும் மேலதிகமாக நன்மை செய்கிறோம். ஒருவர் முற்றிலும் சைவ உணவுக்கு மாறுவது கடினம் என்றால், வாரத்துக்கு ஒருநாள் மட்டுமே அசைவம் என்று குறைத்துக்கொள்வதன் மூலமும் இந்த மண்ணின் நீர்வளத்துக்கு உதவி செய்ய முடியும்.

இதைப் பற்றி எல்லாம் கவலைப்படாமல், நாக்கு ருசியை மட்டுமே கருத்தில் கொண்டுதான் வாழ்வோம் என்று அடம்பிடித்தால், அதனால் பாதிக்கப்படுவது அவரவர் ஆரோக்கியம் மட்டுமல்ல. சுற்றுச்சூழலும், வருங்கால சந்ததியரும்!

## ரூ. 20-க்கு ஒரு கிலோ அரிசி திட்டம்: இதுவரை 1,377 மெட்ரிக் டன் விற்பனை

தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் ரூ.20-க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை ஆயிரத்து 377 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளதாக உணவுத் துறை தெரிவித்துள்ளது.

பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் மற்றும் சட்டப் பேரவையில் செய்யப்பட்ட அறிவிப்புகள் ஆகியவற்றின் முன்னேற்றம் குறித்து தலைமைச் செயலகத்தில் உணவுத் துறை அமைச்சர் ஆர்.காமராஜ் தலைமையில் வியாழக்கிழமை ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அவர் பேசியது:

தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் தரமான விலையில்லா அரிசி ஒரு கோடியே 84 லட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்குவழங்கப்பட்டு வருகிறது. உணவுத் துறைக்கு நடப்பாண்டில் ரூ. 4,900 கோடி மானியமாக ஒதுக்கித் தரப்பட்டுள்ளது. வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் தடுக்கும் நடவடிக்கையாக ரூ.20-க்கு ஒரு கிலோ அரிசி வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை ஆயிரத்து 377 மெட்ரிக் டன் அரிசி விற்பனை செய்யப்பட்டுள்ளது.

பொது விநியோகம் உள்பட ஏனைய அனைத்து திட்டத்துக்கும் தேவையான அரிசி முதலான அத்தியாவசியப் பொருள்கள் போதுமான அளவு கையிருப்பில் உள்ளது.

மேலும் பொது மக்களுக்கு வழங்கப்படும் அரிசி தரமானதாகவும், எவ்விதமான புகாருக்கும் இடம் கொடுக்காமல் உரியவர்களுக்கு, உரிய நேரத்தில் விநியோகம் செய்ய வேண்டும் என்று உணவுத் துறை அமைச்சர் காமராஜ் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் உணவுத் துறை செயலாளர் எம்.பி.நிர்மலா, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் சந்திரசேகரன் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## "சூறைக்காற்றால் சேதமடைந்த வாழைகளுக்கு நிவாரணம் கோரி போராட்டம் நடத்தப்படும்

குமரி மாவட்டத்தில் சூறைக் காற்றால் சேதமடைந்த வாழைகளுக்கு நிவாரணம் கிடைக்காததால் வாழை விவசாயிகள் போராட்டம் நடத்த முடிவு செய்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் மே 6-ம் தேதி வீசிய சூறைக்காற்றில் தும்பகோடு வருவாய் கிராமத்தில் உண்ணியூர்கோணம், அச்சாளீஸ்வரம், கோட்டூர் கோணம், திற்பரப்பு வருவாய் கிராமத்தில் சேக்கல், காஞூர், நந்திமங்கலம், சித்திரக்காலை, களியல் வருவாய் கிராமத்தில் கடையல், செங்குழிக்கரை, காட்டாவிளை, ஆலஞ்சோலை, பேணு, பேச்சிப்பாறை வருவாய் கிராமத்தில் வெட்டிமுறிச்சான், அஞ்சுகண்டறை, காக்கச்சல், சேனம்கோடு, வேட்டி, பொன்மனை வருவாய்கிராமத்தில் அக்கம்விளை, மங்கலம், குறுமாத்தூர், செறுதிக் கோணம், ஈஞ்சக்கோடு உள்ளிட்ட இடங்களில் நூற்றுக்கணக்கான விவசாயிகளின் 20 ஆயிரத்துக்கும் அதிகமான வாழைகள் சாய்ந்தன. இதில் அஞ்சுகண்டறை பகுதியில் மட்டும் ஒரு விவசாயிக்கு 2500 வாழைகள் சாய்ந்தது.

இந்நிலையில் இந்த வாழைகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து கிராம நிர்வாக அதிகாரிகள் சேத மதிப்பீடு குறித்து அறிக்கை தயாரித்து அரசுக்கு அளித்தனர். ஆனால் இதுவரை விவசாயிகளுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நிவாரணம் கேட்டு போராட்டம் நடத்த விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க திருவட்டாறு ஒன்றியச் செயலர் ஜே.சதீஸ் கூறியதாவது: திருவட்டாறு பகுதியில் சூறைக்காற்றால் 20 ஆயிரத்துக்கும் அதிமான வாழைகள் சாய்ந்தன. இதனால் விவசாயிகள் கடனுக்கும், கண்ணீருக்கும் ஆளாகியுள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தி தொடர் கோரிக்கைகள் விடுத்தும் பலனில்லாமல் உள்ளது. இந்நிலையில் இம்மாதம் 10-ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளோம் என்றார் அவர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 18.70 அடியாக இருந்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை மாலை 18.70 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 195 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## சோளம் சாகுபடி மூலம் 100 நாளில் ரூ. 60 ஆயிரம் வருமானம் பெறலாம்

சோளம் சாகுபடி மேற்கொண்டால் 100 நாளில் ரூ. 60 ஆயிரம் வருமானம் ஈட்டலாமென்றார் வேளாண் அறிவியல் நிலையத் தலைவர் கே. வைரவன்.

ஆலங்குடி அருகேயுள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மக்காச்சோளம் சாகுபடி பயிற்சியைத் தொடக்கி வைத்து அவர் பேசியது:

தானியங்களின் அரசியாக திகழும் மக்காச்சோளத்தில் சக்தி 349 கிராம், கலோரி, புரதம் 10.4 கிராம், கொழுப்பு 1.9 கிராம், மாவுச்சத்து 72.6 கிராம், கால்சியம் 25 மி.கி, இரும்பு 4.1 மி.கி. மற்றும் பி விட்டமின்கள் இருப்பதால் இவை ஒரு முழுமையான ஊட்டச்சத்து கொடுக்கக்கூடிய தானியமாக விளங்குகிறது.

ஆடிப்பட்டம், புரட்டாசிப்பட்டம் மற்றும் தைப்பட்டங்களில் பயிரிடலாம். பயிர் வளர்ச்சிக்கு தேவையான தழைச்சத்தை இயற்கை முறையில் எடுத்துக் கொடுக்கும் அசோஸ்பைரில்லத்தை 1 கிலோ விதைக்கு 50 கிராம் வீதமும், வாடல்நோயை கட்டுப்படுத்த சூடோமோனாஸ் 10 கிராம் அல்லது டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்தால் நோய்தாக்கமின்றி வளரும். இதில் ஒரு ஏக்கரில் 30-40 குவிண்டால் வரை மகசூல் கிடைக்கும். தற்போதைய விலை நிலவரப்படி 100 நாள்களில் ஒரு ஏக்கரில் ரூ. 45000 முதல் 60000 வரை வருமானம் பெற முடியும். விதை விதைப்பு முதல் அறுவடை வரை இயந்திரம் உள்ளது என்றார்.

இதைத் தொடர்ந்து, முனைவர் க. கீதா, இதிலிருந்து அவல், நூடுல்ஸ், பிஸ்கட், இட்லி, சப்பாத்தி, தோசை உள்ளிட்ட உணவு தயாரிப்பு முறைகளை விளக்கினார். உதவிப்பேராசிரியர்கள் முனைவர் சு. மதியழகன், முனைவர் மு. கதிரவன் ஆகியோர் பேசினர். திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் குறைந்தது

காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாததால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வியாழக்கிழமை மேலும் குறைந்தது.

கடந்த சில மாதங்களாக மேட்டூர் அணைக்கு போதிய நீர் வரத்து இல்லாததால், அணை வறண்டு காணப்பட்டது.

இந்த நிலையில், கடந்த வாரம் தமிழகம்- கர்நாடகம் எல்லையில் காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் பெய்த மழையால், மேட்டூர் அணைக்கு 1,600 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில், காவிரி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை நின்றதால், அணைக்கு வரும் நீரின் அளவு படிப்படியாக குறைந்து புதன்கிழமை 454 கன அடியாகவும், வியாழக்கிழமை 234 கன அடியாகவும் நீர்வரத்து இருந்தது.

குடிநீர்த் தேவைக்காக அணையிலிருந்து வினாடிக்கு 800 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது.

நீர்வரத்தை விட அணையிலிருந்து திறக்கப்படும் தண்ணீரின் அளவு அதிகமாக உள்ளதால், நீர்மட்டம் மளமளவென குறைந்து வருகிறது. புதன்கிழமை 18.85 அடியாக இருந்த நீர்மட்டம் வியாழக்கிழமை 18.74 அடியாக குறைந்தது. அணையின் நீர் இருப்பு 3.74 டிஎம்சி.

## கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்கக் கோரிக்கை

கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.3,500 வழங்க வேண்டும் என்று தென்னிந்திய விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் செயல் தலைவர் போளூர் கே.வி.ராஜ்குமார் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்த கே.வி.ராஜ்குமார் செய்தியாளர்களிடம் கூறியது:

தமிழகத்தில் முன் எப்போதும் இல்லாத வகையில் மின்தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. இதனால் கரும்பு சாகுபடி வெகுவாக பாதிப்படைந்து வருகிறது. மேலும் உரிய கொள்முதல் விலை கிடைக்காமல் கரும்பு விவசாயிகள் பரிதவித்து வருகின்றனர். இதுகுறித்து தமிழக அரசிடமும் பலமுறை கோரிக்கை விடுத்தும் அலட்சியப்படுத்தி வருகிறது.

உயர்ந்துகொண்டே போகும் டீசல், பெட்ரோல், இடுபொருள்கள் விலை உயர்வுக்கு ஏற்றபடி கரும்பு டன் ஒன்றுக்கு கொள்முதல் விலையாக ரூ.3,500 வழங்க வேண்டும். இத்தொகையை நிலத்திலேயே நிர்ணயித்து வழங்க வேண்டும்.

டாக்டர் ரெங்கநாதன் குழுவினர் அரசுக்கு செய்த பரிந்துரைகளில் ஒன்றான, வருவாயில் பங்கீடு என்பது தமிழக கரும்பு விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே இது குறித்து மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 33.65 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரப்படி 33.65 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 524 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 200 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 1.56 டி.எம்.சி.

## கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலை ரூ.80 ஆக உயர்வு

கறிக்கோழிக்கான பண்ணை கொள்முதல் விலை கிலோவிற்கு ரூ.80 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மின்வெட்டு, வறட்சி காரணமாக தீவன மூலப் பொருள்களான மக்காச்சோளம், சோயா, புண்ணாக்கு, கருவாடு ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துவிட்டது. இதனால் கறிக்கோழி உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டது. இந் நிலையில், கோடை கால வெப்பத்தால் பண்ணைகளின் கோழிகளின் இறப்பு விகிதம் அதிகரித்தது.

இதனால் சிறிய பண்ணை நிறுவனங்கள் கோழி உற்பத்தியை முழுமையாக நிறுத்திவிட்டனர். அதே சமயம், பெரிய கோழிப் பண்ணைகள் கோழி உற்பத்தியை 25 சதவீதம் வரை குறைத்தனர். ஆனால், வெளிச்சந்தையில் கறிக்கோழி நுகர்வு குறையவில்லை. இதன் காரணமாக கறிக்கோழிகளுக்கான தேவை உயர்ந்து வருகிறது. இந் நிலையில், பல்லடம் பிராய்லர் கோ-ஆடினேஷன் கமிட்டி கறிக்கோழிக்கு பண்ணை கொள்முதல் விலையாக கிலோவிற்கு ரூ.80 ஆக நிர்ணயம் செய்தது. கறிக்கோழியின் விலை மேலும் உயரக் கூடும் என பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

## நீரின்றி காய்ந்து கிடக்கும் தென்னை மரங்கள்!

போதுமான நீரின்றி தென்னை மரங்கள் காய்ந்து வருவதால், தென்னை விவசாயிகள் பொருளாதார ரீதியாக கடும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

இதுகுறித்து வள்ளியிரச்சல் விவசாயி ஏ.தங்கவேல் கூறியது: வெள்ளக்கோவில், முத்தூர், மூலனூர் பகுதியில் அதிக எண்ணிக்கையிலான தென்னை மரங்கள் உள்ளன. மழையில்லாததால், இந்த மரங்கள் காய்ந்து வருகின்றன. இந்த மரங்களை காப்பதற்காக ஆழ்குழாய் கிணறு அமைத்தாலும், தண்ணீர் கிடைப்பதில்லை. இதனால் நீரின்றி காய்ந்து வரும் தென்னை மரங்களை காக்க முடியாமல் விவசாயிகள் தவித்து வருகின்றனர். தென் பருவ மழையை நம்பித்தான் காத்திருக்கிறோம். மழையால்தான் மீதமுள்ள மரங்களையும் காக்க முடியும் என்றார்.

## "விவசாயிகள் விற்கும் மரங்களுக்கு அரசே விலையை நிர்ணயிக்க வேண்டும்'

விவசாயிகள் விற்கும் மரங்களுக்கான விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும் என முன்னாள் தலைமை வனப் பாதுகாவலர் ஆர்.கே.பாரதி கூறினார்.

கோவை மாவட்ட மூலிகை மரம் வளர்ப்போர் சங்க கலந்தாய்வுக் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதில், முன்னாள் தலைமை வனப் பாதுகாவலர் ஆர்.கே.பாரதி பேசியது:

மரம் வளர மண் வளம் அவசியமாகிறது. உவர் நிலங்களில் உப்புத்தன்மை இருக்கும். வடிகால்கள் அமைத்து உப்புத்தன்மையைக் குறைப்பதால் ஆழமான வேருள்ள

மரங்களான ஆத்தி, ஆச்சான், கருவேல், வேம்பு உள்ளிட்ட மரங்களை வளர்க்கலாம்.

பாறை போன்ற இடங்களில் மண்ணின் ஆழம் குறைவாக இருக்கும். இதுபோன்ற இடங்களில் குழி தோண்டி வளமான மண்ணை நிரப்ப வேண்டும். பின்பு தடுப்புச் சுவர் அமைத்து மரம் வளர்க்கலாம்.

தண்ணீர் குறைவான பகுதிகளில் நடவு முறைகளை மாற்ற வேண்டும். ஆழமான வேருள்ள மரங்களை நடக் கூடாது. பக்க வேர் கொண்ட மரங்களையே நட வேண்டும். சொட்டு நீர் பாசன வசதி ஏற்படுத்தி இலை மக்குகளை சேர விடுவதால் ஈரப்பதத்தை நிலைநிறுத்த முடியும்.

தாய்லாந்து சவுக்கு, யூகலிப்டஸ் உள்ளிட்ட மரங்கள் 4 முதல் 5 ஆண்டுகளில் நல்ல பலன் தரக்கூடியவை. செம்மண் பகுதிகளில் சில்க் காட்டன் வகை மரங்களை

வளர்க்கலாம். இதன் மூலம் நல்ல வருவாய் பெறலாம்.

மரத்தின் மூலம் மின்சாரம் பெற முடியும். ஒரு கிலோ மரத்தில் இருந்து ஒரு யூனிட் மின்சாரம் தயாரிக்கலாம்.

தனியாரிடம் விவசாயிகள் மரங்களை விற்பதால் விவசாயிகளுக்கு குறைந்த விலையே கிடைக்கிறது. இதற்கான விலையை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும் என்றார்.

பண்ருட்டி தாவர தகவல் மைய நிறுவனர் ஆர்.பஞ்சவர்ணம், வனப் பாதுகாவலர் ராமச்சந்திரபதி, கோவை மாவட்ட மூலிகை மற்றும் மரம் வளர்ப்போர் சங்கத் தலைவர் கே.தேவராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நிவாரணம் வழங்கப்படுமா?ஜி.ராஜன்

தேனி மாவட்டத்தில் வறட்சியால் விவசாயம் பாதிக்கப்பட்ட பகுதிகளை முழுமையாக ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் அரசிடமிருந்து உரிய நிவாரண நிதி பெற்றுத் தர மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

மாவட்டத்தில் 1 லட்சத்து 80 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் வேளாண்மை மற்றும் தோட்டப் பயிர் சாகுபடி நடைபெற்று வருகின்றது. இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால், அணைகளில் நீர்மட்டம் மற்றும் நிலத்தடி நீர் வெகுவாகக் குறைந்துள்ளது. போதிய தண்ணீரின்றி பயிர்கள் கருகியதால், விவசாயிகளுக்கு பெருமளவில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

வறட்சி பாதிப்பு குறித்தும், நிவாரணம் வழங்கக் கோரியும், அந்தந்தப் பகுதியில் உள்ள வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை அலுவலகம், வட்டாட்சியர் அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் ஆகிய இடங்களில் விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கம் சார்பில் மனு அளித்துள்ளனர்.

இந்த நிலையில், தமிழகத்தில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதிக்கப்பட்ட பகுதியாக அரசு அறிவித்தது. தேனி மாவட்டத்தில் வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளை நிதியமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான அமைச்சர் குழுவினர், கடந்த ஏப்ரல் 11 ஆம் தேதி நேரில் பார்வையிட்டனர். அப்போது அமைச்சர் குழுவிடம், மாவட்ட வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை ஆகியவற்றின் சார்பில், வறட்சி பாதித்துள்ள பகுதிகள், பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை ஆகியன குறித்து அறிக்கை அளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையில், மாவட்டத்தில் 63 ஹெக்டேர் பரப்பளவில் நெல், 80 ஹெக்டேர் பரப்பளவில் சோளம், 21 ஹெக்டேர் பரப்பளவில் பயறு வகை பயிர்கள், 123 ஹெக்டேர் பரப்பளவில் பருத்தி, 2 ஹெக்டேர் பரப்பளவில் கரும்பு உள்பட மொத்தம் 289 ஹெக்டேர் பரப்பளவில், 445 விவசாயிகளுக்கு சொந்தமான நிலங்களில் வறட்சியால் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிவாரண நிதி ஒதுக்கீடு:

அதிகாரிகள் அளித்த அறிக்கையின் அடிப்படையில், வறட்சி நிவாரண நிதியாக மாவட்டத்துக்கு அரசு மொத்தம் ரூ. 28 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் அளிக்கப்பட்ட பட்டியலின் அடிப்படையில், தற்போது வருவாய்த் துறை மூலம் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வறட்சி நிவாரண நிதி வரவு வைத்து வழங்கப்பட்டு வருகிறது.

கணக்கெடுப்பில் குளறுபடி:

வறட்சி பாதிப்பு மற்றும் நிவாரண உதவி கோரி விவசாயிகள் அளித்த விண்ணப்பங்கள் மீதும் விசாரணை நடத்தாமல், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ஒருங்கிணைந்து முழுமையான கள ஆய்வு மேற்கொள்ளாமல், வறட்சி பாதிப்பு குறித்து அரசுக்கு அறிக்கை அளித்துள்ளதாக, விவசாயிகள் மத்தியில் புகார் எழுந்துள்ளது.

அதிகாரிகளின் பரிந்துரை அடிப்படையில் நிவாரண நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், பாதிப்பு ஏற்பட்டுள்ள அனைத்து பகுதிகளுக்கும் உரிய நிவாரண உதவி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக, விவசாயிகள் கூறுகின்றனர்.

இது குறித்து, தமிழக விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் டி. கண்ணன் கூறியது: மாவட்டத்தில் 48 ஆயிரம் ஹெக்டேரில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல், பருத்தி, கரும்பு, சோளம், மக்காச்சோளம் உள்ளிட்ட பயிர்களில் 25 சதவிகிதம் முழு அளவிலும், 50 சதவிகிதம் பகுதி அளவிலும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

தண்ணீரின்றி 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பட்டுப்போய் வெட்டப்பட்டுள்ளன. வெற்றிலைக் கொடிக்கால் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

வறட்சி பாதிப்பு மற்றும் நிவாரண உதவி கோரி, வருவாய்த் துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் அளித்த மனுக்கள் முழுமையாக நிராகரிக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கரும்புள்ளி வட்டாரமாக அறிவிக்கப்பட்ட சின்னமனூர் வட்டாரத்திலும், வறட்சியின் பிடியில் சிக்கியுள்ள ஆண்டிபட்டி வட்டாரத்திலும் குறைந்த எண்ணிக்கையிலேயே விவசாயிகள் நிவாரண உதவி பெற்றுள்ளனர்.

வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுவதுமாக அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, பாதிக்கப்பட்ட விவசாயிகள் அனைவருக்கும் நிவாரண உதவி கிடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

இது குறித்து, வேளாண்மைத் துறை அதிகாரிகளிடம் கேட்டதற்கு, வறட்சி பாதிக்கப்பட்ட பகுதிகளில் வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத் துறை சார்பில் ஒருங்கிணைந்த கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அரசிடம் நிவாரண நிதி பெற்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது என்றனர்.

## கொடைக்கானலில் குளிர் பிரதேச பழப் பயிர் சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் மற்றும் கேரள தேசிய தோட்டக்கலை இயக்கம் சார்பில், குளிர் பிரதேச பழப் பயிர்களுக்கான சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கம், கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது.

இதில், தோட்டக்கலை துணை இயக்குநர் ராஜாமுகமது தலைமை வகித்து, குளிர் பிரதேச பழப் பயிர்களின் சாகுபடி முக்கியத்துவம், பல்வேறு திட்டங்கள் மற்றும் விவசாயிகள் குழுக்கள் அமைப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தார்.

பயிற்சியினை, தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் துவக்கிவைத்து, குளிர் பிரதேசப் பழப் பயிர்களின் விளைச்சலை அதிகரிக்க நவீன சாகுபடி தொழில்நுட்பங்களின் பங்கு பற்றியும், உயர் விளைச்சல் ரகங்களின் அறிமுகம் குறித்தும் பேசினார்.

நிகழ்ச்சியில், மத்திய செம்மறி ஆடுகள் மற்றும் உரோம ஆராய்ச்சி நிலையத்தின் முதன்மை ஆராய்ச்சியாளர் ராஜேந்திரன், பழத் தோட்டங்களில் கால்நடை வளர்ப்பின் முக்கிய அம்சங்கள் மற்றும் கூடுதல் வருமானம் பெற வழிமுறைகள் பற்றி விளக்கினார்.

தோட்டக்கலை தொழில்நுட்பப் பயிற்சி குறித்து, பயிற்சியாளர்கள் செந்தமிழ்ச் சொல்வி, சதீஷ், வெற்றிவேல்காளை, முத்துச்செல்வி ஆகியோர், விரிவாக எடுத்துரைத்தனர்.

மேலும், 2 நாள்கள் நடைபெற்ற இப் பயிற்சி முகாமில் கலந்துகொண்ட 50-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு, பழ மரங்கள் வடிவமைத்தல், கவாத்து செய்தல், ஒட்டு கட்டுதல் மற்றும் நூற்புழு பற்றிய வயல் விளக்க செய்முறைகள் ஆகியன செய்து காண்பித்தனர்.

கேரள தோட்டக்கலை அலுவலர் முருகன் நன்றி கூறினார்.

## திருவள்ளூர், செங்குன்றத்தில் கனமழை

திருவள்ளூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் வியாழக்கிழமை பிற்பகல் கனமழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருவள்ளூரில் கடந்த வாரம் வரை கத்திரி வெயில் மக்களை வாட்டி வந்தது. இதையடுத்து கடந்த சில தினங்களாக திருவள்ளூர் மாவட்டத்தின் பல பகுதிகளில் பரவலாக மழை பெய்து வந்தாலும் திருவள்ளூர் நகரத்தில் மட்டும் மழையில்லாமல் புழுக்கமான நிலை நீடித்து வந்தது.

இந்நிலையில் வியாழக்கிழமை பிற்பகல் வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து, குளிர்ந்த காற்று வீசியது. இதைத் தொடர்ந்து கன மழை பெய்தது. 45 நிமிடங்கள் விடாமல் பெய்த மழையால் பூமி குளிர்ந்து சாலைகளில் மழை நீர் வெள்ளமாக ஓடியது. இதனால் திருவள்ளூர் நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

கனமழை காரணமாக பாதாள சாக்கடைப் பணிகள் முடிந்து மூடப்படாமல் இருந்த மண் சாலைகள் சேறும், சகதியுமாக மாறின. இதனால் பூங்கா நகர், அய்யனார் அவென்யூ, வரதராஜநகர், எம்.ஜி.ஆர்.நகர் உள்ளிட்ட பகுதி மக்கள் சிரமத்துக்குள்ளாகினர்.

செங்குன்றத்தில்....

செங்குன்றம், ஜூன் 6: தென்மேற்குப் பருவமழை தொடங்கியதின் விளைவாக செங்குன்றம் பகுதியில் வியாழக்கிழமை மாலை சூறைக் காற்றுடன் பலத்த மழை பெய்தது. தென்மேற்குப் பருவமழை தொடங்கியதை அடுத்து தமிழகத்தில் பல இடங்களில் இரு தினங்களாக மழை பெய்து வருகிறது.

இந்நிலையில் வியாழக்கிழமை, செங்குன்றம் பகுதியில் மதியம் இரண்டு மணி வரை வெயில் சுட்டெரித்தது. அதன்பின் திடீரென சூறைக் காற்றுடன் உருவான கார்மேகம் சில நிமிடங்களில் மழையாக கொட்ட தொடங்கியது.

திடீர் காற்றும், மழையும் செங்குன்றம் பஸ் நிலையம் மற்றும் பஜார் பகுதியில் தெருவோரம் கடை வைத்துள்ள வியாபாரிகளை பெரிதும் பாதித்தது.

இரண்டு மணி நேரம் நீடித்த மழை காரணமாக தெருக்களில் தண்ணீர் தேங்கியது, இதனால் போக்குவரத்து பாதித்தது.

செங்குன்றம், புழல், மாதவரம், பாடியநல்லூர் வரை நல்ல மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்து மாலை முதல் குளிர் காற்று வீசியது.

### சென்னை மற்றும் சுற்று வட்டாரங்களில் பலத்த மழை

சென்னை மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் இன்று மதியம் பலத்த மழை பெய்தது.

அக்னி எனப்படும் கத்திரி வெயில் முடிவடைந்த நிலையில், கடந்த மூன்று நாட்களாகவே சென்னையில் வானம் மேக மூட்டமாகக் காணப்பட்டது. எனினும், மழை பெய்யாமல் சென்னைவாசிகளை ஏமாற்றி வந்தது.

இந்த நிலையில், இன்று மதியம், 3 மணியளவில் சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பலத்த மழை பெய்தது. தொடர்ந்து மாலை வரை லேசான தூறல் போட்டபடியே இருந்தது.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

07.06.2013 A.M

## உழவர் பெருவிழாவில் மண் மாதிரிகள்:31 ஆயிரம் விவசாயிகளிடம் சேகரிப்பு

ஈரோடுஈரோடு மாவட்டத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் :, 31 ஆயிரம் விவசாயிகளின் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, பரிசோதனை நடந்து வருகிறது. தமிழகத்தில், இரண்டாம் பசுமைப் புரட்சி ஏற்படுத்த, கடந்த தமிழ் புத்தாண்டு தினத்தில் இருந்து, மே, 20ம் தேதி வரை உழவர் பெருவிழா நடத்தப்பட்டதுபெருவிழாவில் ., விவசாயிகளுக்கு அறுசுவை உணவுடன், தெருக்கூத்து, நாடகம், கிராமிய பாடல்கள், நடனம், கையேடு மூலம் விழிப்புணர்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளை சேர்ந்த அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர்பெருவிழாவில் . .பங்கேற்ற விவசாயிகளின் நிலத்தில் இருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டது பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட மண்ணில் இருந்து, தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து ஆகிய பேரூட்டச்சத்து, நுண்ணுட்டச் சத்து ஆகியவற்றின் அளவுகள் எடுக்கப்பட்டதுஈரோடு மாவட்டத்தில்., 14 வேளாண் விரிவாக்க மையத்தின் வேளாண்மை, தோட்டக்கலை, விற்பனை துறை அலுவலர்கள் மூலமாக, 31 ஆயிரம் விவசாயிகளிடம் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளதுஇந்த மண்மாதிரியின் பரிசோதனை . அடிப்படையில், வரும் நாட்களில் எவ்விதமான பயிர்கள் சாகுபடி செய்வது, அதற்கு தேவையான சத்துகள், உரம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடுகளை அதிகாரிகள் வழங்கி வருகின்றனர்இதுகுறித்து . வேளாண்மை அதிகாரிகள் கூறியதாவதுதனியார் மண் பரிசோதனை மையங்களுக்கு : இணையாக, அரசு பரிசோதனை மையங்களில் மண் பரிசோதனைகள் செய்யப்படுகிறது . கடந்த காலங்களில், குறிப்பிட்ட சத்து விபரங்கள் மட்டுமே கண்டறிந்து தெரிவிக்கப்படும். நடப்பு ஆண்டில் இருந்து நுண்ணுட்ட சத்தின் விபரமும் தரப்படுகிறதுதனியார் கூடத்தில் . ஒரு சோதனைக்கு, 500 ரூபாய் வரை கட்டணம் செலுத்த வேண்டும்ஆனால் ., அரசின்

மையங்களில், ஒரு சோதனைக்கு, 20 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும்ஒவ்வொரு . அறுவடைக்குப் பின்னும் விவசாயிகள் மண்பரிசோதனை செய்து விவசாயம் செய்தால், அதிக லாபம் அடையலாம்உ.ழவர் பெருவிழாவில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளின் முடிவுகள், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு மூலமாக வழங்கப்படுகிறது, என்றனர்.

**மக்காச்சோளம் விலை மேலும் உயரும்:தமிழ்நாடு வேளாண் பல்கலை., தகவல்**

கோவைகோழித் தீவன தயாரிப்பில்:, முக்கிய மூலப் பொருளாக விளங்கும் மக்காச் சோளத்திற்கான தேவை அதிகரித்துள்ளதுஆனால் ., அதற்கேற்ப, அதன் உற்பத்தி இல்லை என்பதால், மக்காச் சோளம் விலை உயரும் என, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் .யு.ஏ.என்.டி),) மேற்கொண்ட ஆய்வில் தெரியவந்துள்ளது. தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின், ஏற்றுமதி சந்தை நுண்ணாய்வு பிரிவு, கடந்த 17 ஆண்டுகளாக, உடுமலைப்பேட்டை சந்தையில் நிலவிய மக்காச் சோளத்தின் விலையை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது.
**சாகுபடி:**அதன் அடிப்படையில், ஒரு குவிண்டால் மக்காச் சோளத்தின் விலை, நடப்பு ஜூன்ஜூலை மாதங்களில்-, 15 ஆயிரம் ரூபாயை தாண்டும் என்று கணித்துள்ளது . இதையடுத்து, விவசாயிகள், மக்காச் சோளத்தை இருப்பில் வைத்திருந்து, விலை ஏறும்போது விற்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்இந்தியாவில்., மக்காச் சோளம், கோடை மற்றும் குளிர்காலம் என, இரு பருவங்களில், சாகுபடி செய்யப்படுகிறது. பொதுவாக, கோடை சாகுபடியில், மக்காச் சோளம் மக‹ல் அதிகம் இருக்கும் சென்ற.2012-14ம் நிதியாண்டில், இந்தியாவில், 86.70 லட்சம் ஹெக்டேரில் மக்காச் சோளம் பயிரிடப் பட்டதுஇதன் மூலம் ., 2.25 கோடி டன் சோளம் உற்பத்தியானதுஆசியாவில் .,அதிக அளவில் மக்காச் சோளம் ஏற்றுமதி செய்யும் முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது.
**கோழி தீவனம்:**மக்காச் சோளம் உற்பத்தி, இரு பருவங்களை மட்டுமே சார்ந்துள்ளதும், கோழித் தீவன துறையின் தேவை அதிகரித்துள்ளதும், மக்காச் சோளம் சந்தையில் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.2012-13ம் குளிர் கால, ரபி சாகுபடியில், மக்காச் சோளம் உற்பத்தி, 55 லட்சம் டன் என்ற அளவிற்கே இருக்கும் என, டி.யு.ஏ.என்., கணித்துள்ளது . பீகாரில் மட்டும், ரபி பருவ விளைச்சல், கடந்த ஆண்டை விட, 20 சதவீதம்

அதிகரித்துள்ளதுஇதே காலத்தில் ., இதர மாநிலங்களின் மக்காச் சோளம் உற்பத்தி குறைந்துள்ளது.

மக்காச் சோளம், கோதுமை, சோயா புண்ணாக்கு உள்ளிட்ட கோழித் தீவனங்களுக்கான தேவை, பெருகி வருகிறதுகோழித் துறையின் சந்தை மதிப்பு., 360 கோடி டாலராக வளர்ச்சி கண்டுள்ளதுஇத்துறை ., ஆண்டுக்கு 10 சதவீத வளர்ச்சியை கண்டு வருகிறது . ஆண்டுக்கு, 30 லட்சம் டன் கோழி இறைச்சி உற்பத்தி செய்யப்படுகிறதுசர்வதேச . சந்தையில ும், இந்திய மக்காச் சோளத்திற்கான தேவை உயர்ந்து வருகிறது கடந்த . 2009-10ம் நிதியாண்டில், நாட்டின் மக்காச் சோளம் ஏற்றுமதி, 1.90 லட்சம் டன்னாக இருந்ததுஇது ., 2011-12ம் நிதியாண்டில், இரு மடங்கு அதிகரித்து, 4.80 லட்சம் டன்னாக உயர்ந்து, புதிய சாதனை படைத்ததுநடப்ப. 2013ம் காலண்டர் ஆண்டில், இந்தியாவின் மக்காச் சோளம் ஏற்றுமதி, 3 - 3.50 லட்சம் டன் என்ற அளவிற்கே இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

**ஏற்றுமதி:**கடந்த நிதியாண்டை விட, நடப்பு நிதியாண்டில் உள்நாட்டில், மக்காச்சோளத்திற் கான தேவை அதிகரிக்கும் என்பதால், அதன் ஏற்றுமதி குறையும் என்று எதிர்பார்க்கப் படுகிறதுமேலும்., நடப்பாண்டு மக்காச்சோளம் உற்பத்தியில், அமெரிக்கா புதிய சாதனை படைக்கும் என, கணிக்கப்பட்டுள்ளதுஇதையடுத்து ., அந்நாடு அதிக அளவில், மக்காச் சோளத்தை ஏற்றுமதி செய்யும் என்பதால், சர்வதேச சந்தையில், இதர நாடுகளின் பங்களிப்பு குறையும் என, தெரிகிறது.

ஊட்டி பீன்ஸ்க்கு சென்னையில் மவுசு

ஊட்டிஊட்டி பீன்ஸ்க்கு:, சென்னையில் வரவேற்பு காணப்படுகிறதுசென்னை காய்கறி . மார்கெட்டில், சில நாட்களாக, பீன்ஸ்க்கு தேவை அதிகரித்துள்ளதுஊட்டி காய்கறி . இருந்து மார்க்கெட்டில், தினசரி, மேட்டுப்பாளையம், கோவை மற்றும் சென்னைக்கு பீன்ஸ் அனுப்பி வைக்கப்படுகிறதுசென்னையில் ., பீன்ஸ் தேவை அதிகரித்துள்ளதால், ஊட்டியில்இருந்து நேரடியாக சென்னைக்கு, பீன்ஸ் அனுப்பப்படுகிறது. ஊட்டியில், ஒரு கிலோ பீன்ஸ், 70 ரூபாய்க்கு கொள்முதல் செய்யப்படுகிறதுஇது . சென்னையில், சில்லரை விலையில், கிலோ, 90 ரூபாய் முதல், 110 வரை, விற்கப்படுவதாக, ஊட்டி வியாபாரிகள் தெரிவித்தனர்.



**உழவு வாகனங்கள் கிடைக்காமல் விவசாயிகள்தவிப்பு வேளாண் பொறியியல் துறை ... மெத்தனம்**

மதுராந்தகம்வேளாண் பொறியியல் துறையில்:, உழவு இயந்திரங்கள் பற்றாக்குறை, பராமரிப்பு குறைவு ஆகியவற்றால், உழவு செய்ய முடியாமல் மாவட்டத்தில் பல விவசாயிகள் பாதிக்கப் பட்டு உள்ளனர்காஞ்சிபுரம் மாவட்டத்தில்., நெல் அதிகமாக பயிரிடப்படுகிறதுஇதற்கு ., கூலி ஆட்கள் அதிகம் தேவைஆனால் ., கூலி ஆட்கள் பற்றாக்குறை அதிகமாக உள்ளதால், இயந்திரங்களின் உதவியோடு, நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல் உள்ளிட்ட பணிகளை விவசாயிகள் மேற்கொண்டு வருகின்றனர்முன்பதிவுவிவசாயிகளின் தேவைக்காக., வேளாண் பொறியில் துறையில் இருந்து, குறைந்த வாடகையில், உழவு, அறுவடை இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றனஇதற்கு ., இயந்திரங்கள் தேவைப்படும் விவசாயிகள், முன்பதிவு செய்ய வேண்டும்பதிவு முன்னுரிமை அடிப்படையில் ., உழவு வாகனங்கள் அனுப்பி வைக்கப்படும்ஒரு விவசாயி., குறைந்தபட்சம் 5 மணி நேரத்திற்கு இயந்திரத்தை வாடகைக்கு எடுத்து, பயன்படுத்த வேண்டும்இயந்திரத்திற்கு உழவு ., மணிக்கு 370 ரூபாயும், அறுவடை இயந்திரத்திற்கு, குறைந்தபட்சமாக 1600 ரூபாயும் வாடகை பெறப்படுகிறதுகாத்திருப்புகாஞ்சிபுரம் மாவட்டத்தில்., நந்தனம், காஞ்சிபுரம், மதுராந்தகம் ஆகிய இடங்கள் மண்டலங்களாக பிரிக்கப்பட்டு, அவற்றில், வேளாண் பொறியியல் மண்டல அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றனஇவற்றில் ., மதுராந்தகம் மண்டலத்தில் தான், உழவு மற்றும் அறுவடை இயந்திரங்களின் தேவை அதிகமாக உள்ளது .

நடப்பாண்டில், இதுவரை 410 பேர், உழவு இயந்திரங்கள் கேட்டு, காத்திருக்கின்றனர்ஆனால்., உழவு இயந்திரங்கள் பற்றாக்குறை, இயந்திரங்கள் பழுது காரணமாக, முன்பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு, குறிப்பிட்ட நேரத்தில் உழவு இயந்திரங்களை வேளாண் பொறியியல் துறை அனுப்ப முடியவில்லைஇதனால் ., விவசாயிகள் கடுமையாக பாதிக்கப் பட்டு உள்ளனர்பாதிப்புஇது குறித்து., பூதூர் விவசாயி கிருஷ்ணன் கூறுகையில், ""எனக்கு சொந்தமான 20 ஏக்கர் விவசாய நிலத்தில் நெல் பயிரிட்டுள்ளேன்நிலத்தை உழவு செய்வதற்காக ., கடந்த ஏப்ரல் மாதம் 25ம் தேதி கருங்குழி வேளாண் துறையினரிடம் ரூபாய் 5 ஆயிரம் முன்பணம் கட்டி, ரசீது வாங்கினேன் அவர்கள் .27ம் தேதி உழவு செய்து தருவதாக கூறினர்ஆனால் ., இரண்டு மாதங்களுக்கு மேலாகியும் அவர்கள் உழவு ஓட்டி தரவில்லைபணத்தையும் திருப்பி . தரவில்லை," என்றார்மேலும்., ""நாற்றுவிட்டு 30 நாட்களுக்குள் நடவு செய்தால் தான், நல்ல மக‹ல் எடுக்க முடியும்இவர்கள் உழவு செய்து தராத காரணத்தால் ., குறிப்பிட்ட நாளில் நான் நடவு செய்ய இயலவில்லைவேளாண் துறை அலுவலகத் .திற்கு சென்று கேட்டதற்கு, இயந்திரங்கள் கோளாறாகிவிட்டதாகவும், பழுது நீக்கப்பட்ட பின் அனுப்பப்படும் எனவும் கூறினர்இதனால் ., தனியார் நிறுவனத்தின் உதவியுடன் உழுதுள்ளேன்," என்று கூறினார்முன்னுரிமைஇது குறித்து., மதுராந்தகம் மண்டல வேளாண் பொறியியல் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், ""தற்போது, அதிகமான விவசாயிகள் உழவு இயந்திரம் கேட்டு முன் பதிவு செய்துள்ளனர்நந்தனம் ., காஞ்சிபுரம், மதுராந்தகம் ஆகிய மண்டல அலுவலகங்களில் மூன்று உழவு இயந்திரங்கள் உள்ளன . க்கு உழவு இயந்திரங்கள் அனுப்பி முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளு வைக்கப்பட்டு வருகின்றனஒரு சில நேரங்களில் ., இயந்திர கோளாறு காரணமாக, வாகனங்களை குறிப்பிட்ட நேரத்திற்கு அனுப்ப முடியவில்லை," என்றார்இது குறித்து., மாவட்ட வேளாண் துறை அதிகாரி ஒருவரிடம் கேட்டபோது, ""மாவட்டத்தில் 159 கூட்டுறவு வேளாண் சங்கங்கள் உள்ளனஇவற்றில் ., 70 சங்கங்களில், உழவு, நெல் நடவு இயந்திரங்களும், பவர் டிரில்லர், டிராக்டர்களும் உள்ளனவிவசாயிகள் அவற்றையும் . பயன்படுத்தி, விவசாயத்தை மேற்கொள்ளலாம்," என்றார்.

**நிலத்தடி நீரை பாதுகாக்க குளங்களை தூர்வார ஆட்சியரிடம் மனு**

மீஞ்சூர்நிலத்தடி நீரை பாதுகாக்க:, தூர்ந்து கிடக்கும் குளங்களை சீரமைக்க வேண்டும் என, மீஞ்சூர் சுற்று வட்டார மக்கள் நலக் கூட்டமைப்பு சார்பில், கோரிக்கை மனு, ஆட்சியரிடம் அளிக்கப்பட்டு உள்ளதுமீஞ்சூர் பகுதியை சுற்றிலும் ஏராளமான தொழில் . நிறுவனங்களின் வருகையாலும், நிலத்தடி நீர் குறைந்து போனதாலும், ஆழ்துளை மோட்டார்கள் மூலம் கிடைக்கும் தண்ணீர் உவர்ப்பாக மாறிவிட்டுஆக்கிரமிப்புகள் . பேரூராட்சிக்கு உட்பட்ட குடியிருப்பு பகுதிகளுக்கு, கொற்றலை ஆற்றின் அருகில் உள்ள வன்னப்பாக்கம் கிராமத்தில் இருந்து, குடிநீர் கொண்டு வரப்படுகிறதுநிலத்தடி நீர் . ஆதாரம் உள்ள ஓரிரு இடங்களில் மட்டும், ஆழ்துளை மோட்டார் போட்டு குடிநீர் எடுக்கப்படுகிறதுசென்னை புறநகர் பகுதிகளில் வளர்ந்து வரும் பகுதியாக., மீஞ்சூர் பேரூராட்சி உள்ளதாலும், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்பவும் தண்ணீர் தேவை, நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளதுமீஞ்சூர் பேரூராட்சி.க்கு உட்பட்ட அரியன்வாயல் பகுதியில் உள்ள அம்மாசெட்டிகுளம், கல்யாண சுந்தரம் குளம், புதுப்பேடு குளம், உடையார் பாளையம் குளம், வெள்ளைக்கார தோட்ட குளம் உள்ளிட்ட, 11 குளங்கள் தூர்ந்து கிடக்கின்றனஇவற்றை சீரமைத்தால்., மழைநீர் தேக்கி வைப்பதுடன், நிலத்தடி நீர் ஆதாரமும் அதிகரிக்கும்மேற்கண்ட குளங்களை சீரமைக்க மீஞ்சூர் வட்டார . மக்கள் நலக் கூட்டமைப்பு சார்பில், மாவட்ட ஆட்சியரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு ஒன்று அளிக்கப்பட்டதுஅதில்., ""மீஞ்சூர் பகுதி மக்களின் வாழ்வாதார தேவைக்காக பேரூராட்சியில் உள்ள, 11 குளங்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி சீரமைக்க வேண்டும்குளங்களை சுற்றிலும் ., முள்வேலி அமைத்து பாதுகாத்திட வேண்டும் . மேற்கண்ட பணிகளை மழைக்காலம் வருவதற்கு முன்னதாக, பொதுப்பணி துறையினர் வாயிலாக மேற்கொள்ள வேண்டும்" என, கோரப்பட்டு உள்ளதுமதிப்பீடுமீஞ்சூர் சுற்று . வட்டார மக்கள் நலக்கூட்டமைப்பு நிர்வாகிகள் சார்பில் கொடுக்கப்பட்ட மனு மீது, உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதாகவும், நமக்கு நாமே திட்டத்தின் மூலம் செயல்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நேரில் சென்று, மதிப்பீடு தயாரிக்க உத்தரவிடுவதாகவும், ஆட்சியர் வீர ராகவ ராவ் தெரிவித்தார்.

**மக்காசோளம் வரத்து குறைவு**

சின்னசேலம்சின்னசேலம் பகுதியில் ஏற்பட்ட கடும் வறட்சியால் மார்க்கெட் கமிட்டிற்கு : சின்னசேலம் மார்க்கெட் கமிட்டிற்குநேற்று முன்தினம் .மக்காசோளம் வரத்து குறைந்தது 75 மக்காசோளம் மூட்டைகள் வந்தன.அதிக விலை ரூ .1,529, குறைந்த விலை ரூ.1,464 விலைபோனது.கடந்த வாரத்தை விட ரூ .58க்கு விலை உயர்வாகபோனது எள் . 2மூட்டைகள் வந்தன.அதிக விலை ரூ .5,329, குறைந்த விலை ரூ.5,289 விலை போனது கடந்த வாரம்.7 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய்க்கு 535 மக்காசோளம் மூட்டைகள் கொள்முதல் செய்யப் பட்டது .2 லட்சத்து 29 ஆயிரத்திற்கு எள் கொள்முதல் ஆகும்கடும் . வறட்சி நிலவியதால் மக்காசோளம் மக‹ல் பாதித்து வரத்து குறைவாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**மரவள்ளியில் மர்மநோய் தாக்கம்மகசூல் குறைவு :**

திருச்செங்கோடுதிருச்செங்கோடு சுற்றுவட்டாரத்தில் :, சாகுபடி செய்யப்பட்ட மரவள்ளி பயிரை மர்மநோய் தாக்கியுள்ளதால், மகசூல் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது . திருச்செங்கோடு அருகே கொல்லப்பட்டி, பாலிக்காடு சுற்றுவட்டாரத்தில், நூற்றுக்கணக்கான ஏக்கர் பரப்பளவில், மரவள்ளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது . அவற்றில், தற்போது, மர்மநோய் தாக்கத் துவங்கியுள்ளதுஅத .னால், மரவள்ளியின் இலைகள் கருகி, மகசூல் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளதுஇதுகுறித்து ., பாலிக்காட்டை சேர்ந்த விவசாயி நடேசன் கூறியதாவதுஎனக்கு சொந்தமான எட்டு ஏக்கர் விளை : நிலத்தில், மரவள்ளி சாகுபடி செய்து, முறையாக பராமரிப்பு செய்து வந்தேன்ஆறு மாதம் . கடந்த நிலைையில், மரவள்ளி செடியில் மர்ம நோய் தாக்குதல் ஏற்பட்டுள்ளதுஅதனால் ., செடிகள் கருகி வருகின்றனவேளாண் துறை .மகசூல் பாதிக்கும் சூழல் உருவாகியுள்ளது . அதிகாரிகளிடம் கேட்டால், முறையான பதில் இல்லை திருச்செங்கோடு சுற்றுவட்டாரம் . முழுவதும், இதே நிலைதான் உள்ளதுஇவ்வா .று அவர் கூறினார்.

**உழவர் பெருவிழாவில் மண் மாதிரிகள்:31 ஆயிரம் விவசாயிகளிடம் சேகரிப்பு**

ஈரோடுஈரோடு மாவட்டத்தில் நடந்த உழவர் பெருவிழாவில் :, 31 ஆயிரம் விவசாயிகளின் மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, பரிசோதனை நடந்து வருகிறது. தமிழகத்தில், இரண்டாம் பசுமைப் புரட்சி ஏற்படுத்த, கடந்த தமிழ் புத்தாண்டு தினத்தில் இருந்து, மே, 20ம் தேதி வரை உழவர் பெருவிழா நடத்தப்பட்டதுபெருவிழாவில் .,

விவசாயிகளுக்கு அறுசுவை உணவுடன், தெருக்கூத்து, நாடகம், கிராமிய பாடல்கள், நடனம், கையேடு மூலம் விழிப்புணர்வு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த துறைகளை சேர்ந்த அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் பங்கேற்று விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினர்பெருவிழாவில் . .பங்கேற்ற விவசாயிகளின் நிலத்தில் இருந்து மண் மாதிரிகள் எடுக்கப்பட்டது பரிசோதனைக்காக எடுக்கப்பட்ட மண்ணில் இர◌ுந்து, தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து ஆகிய பேரூட்டச்சத்து, நுண்ணுட்டச் சத்து ஆகியவற்றின் அளவுகள் எடுக்கப்பட்டதுஈரோடு மாவட்டத்தில்., 14 வேளாண் விரிவாக்க மையத்தின் வேளாண்மை, தோட்டக்கலை, விற்பனை துறை அலுவலர்கள் மூலமாக, 31 ஆயிரம் விவசாயிகளிடம் மண்மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளதுஇந்த மண்மாதிரியின் பரிசோதனை . அடிப்படையில், வரும் நாட்களில் எவ்விதமான பயிர்கள் சாகுபடி செய்வது, அதற்கு தேவையான சத்துகள், உரம் உள்ளிட்ட விபரங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடுகளை அதிகாரிகள் வழங்கி வருகின்றனர்இதுகுறித்.து வேளாண்மை அதிகாரிகள் கூறியதாவதுதனியார் மண் பரிசோதனை மையங்களுக்கு : இணையாக, அரசு பரிசோதனை மையங்களில் மண் பரிசோதனைகள் செய்யப்படுகிறது . கடந்த காலங்களில், குறிப்பிட்ட சத்து விபரங்கள் மட்டுமே கண்டறிந்து தெரிவிக்கப்படும். நடப்பு ஆண்டில் இருந்து நுண்ணுட்ட சத்தின் விபரமும் தரப்படுகிறதுதனியார் கூடத்தில் . ஒரு சோதனைக்கு, 500 ரூபாய் வரை கட்டணம் செலுத்த வேண்டும்ஆனால் ., அரசின் மையங்களில், ஒரு சோதனைக்கு, 20 ரூபாய் மட்டும் செலுத்தினால் போதும்ஒவ்வொரு . மண்பரிசோதனை செய்து விவசாயம் செய்தால் அறுவடைக்குப் பின்னும் விவசாயிகள், அதிக லாபம் அடையலாம்உழவர் பெருவிழாவில் எடுக்கப்பட்ட மண் மாதிரிகளின் . முடிவுகள், ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு மூலமாக வழங்கப்படுகிறது, என்றனர்.

**சின்ன வெங்காயம் அறுவடை தீவிரம்**

கோபிசெட்டிபாளையம்சின்னவெங்காயம் அறுவடை கோபி சுற்று வட்டாரத்தில் : துவங்கி உள்ளதால◌், வெங்காயம் விலை குறையும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. தமிழகத்தில் ஏப்ரல் நவம்பர் மாதங்களில் சின்ன வெங்காயம் - மே மற்றும் அக்டோபர் - .எஸ்.சி .சாகுபடி செய்யப்படுகிறது450, சி.எஸ்.911, சி.எஸ்.450, ஏ.சி.863 ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறதுகார அமிலதன்மை ., 6 - 7 சதவீத அளவில் இருந்தால் சின்ன

வெங்காயம் நன்கு செழித்து வளரும்.
கோபியை அடுத்த டிபாளையம்.என்., கள்ளிப்பட்டி, கொங்கர்பாளையம், விநோபா நகர், வாணிப்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளில், 2,500 ஏக்கரில் ஆண்டுதோறும் இருமுறை சின்ன வெங்காயம் பயிரிடப்படுகிறது பருவமழை .பொய்த்ததால், கிணற்று நீர் பாசனத்தில், 500 ஏக்கரில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
ஒரு ஏக்கருக்கு, ஆறு டன் முதல், ஏழு டன் வரை சின்ன வெங்காயம் விளைச்சல் கிடைக்கும்ஆனால் ., தண்ணீர் தட்டுப்பாட்டால், மகசூல் பாதிப்பு ஏற்பட்டு, ஒரு ஏக்கருக்கு, இரண்டு டன் சின்ன வெங்காயம் மட்டுமே விவசாயிகளுக்கு கிடைக்கிறது . சென்ற ஆண்டு இப்பகுதியில் வெங்காயம் அறுவடை நேரத்தில் ஒரு கிலோ, 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது.
நடப்பாண்டு வெங்காயம் பதுக்கல் எதிரொலியாக, புதிய வெங்காயம் சில்லரை விலையில் ஒரு கிலோ, 70 ரூபாய்க்கு மேல் விற்கப்படுகிறதுமார்க்கெட்டில் ஒரு கிலோ ., 100 ரூபாய்க்கு விற்கப்படுவதால் சின்ன வெங்காயம் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்ஒரு எக்டேர் நடவு செய்ய :விவசாயிகள் கூறியதவது., 1,000 கிலோ விதை வெங்காயம் தேவைகட்டுப்பாடு களை ., பின்நேர்த்தி செய்தல் மற்றும் பூச்சி தாக்குதல் இன்றி இருந்தால், நடவு செய்யப்பட்ட, 70 முதல், 90 நாட்களில் எக்டேருக்கு, 12 முதல்,16 டன் வெங்காயம் மகசூல் கிடைக்க வாய்ப்புண்டுதண்ணீர் .
ய்யப்படும் அறுவடை செ .பற்றாக்குறையால் சின்னவெங்காயம் உற்பத்தி குறைந்துள்ளது இடத்திலேயே, சில்லரை விலையில் ஒரு கிலோ, 70 ரூபாய்க்கு, நேரடியாக விற்பனை செய்கிறோம் .வியாபாரிகளுக்கு மொத்த விலையில் ஓரளவு விலையை குறைப்போம் . பாளையம் சுற்று வட்டாரத்தில் வெங்காய அறுவடை துவங்கி உள்ளதால்.என்.டி, வெங்காயத்தின் விலை வீழ்ச்சியடைய வாய்ப்பு உள்ளது, என்றனர்.

**காந்தி மார்க்கெட்டில் புதிய சங்கம் உதயம்**

திருச்சி.திருச்சி காந்தி மார்க்கெட்டில் மேலும் ஒரு புதிய சங்கம் உதயமானது :
திருச்சி காந்தி மார்க்கெட்டில் வியாபாரம் செய்யும் அனைத்து காய்கனி வியாபாரிகளின் நலனுக்காக பல்வேறு சங்கங்கள் உள்ளனதற்போது புதிய சங்கம் ஒன்று உருவாகி .
.உள்ளது
இதற்கான ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின்

திருச்சி அலுவலகத்தில் நடந்தது.

திருச்சி மண்டல தலைவர் தமிழ்செல்வம் வரவேற்றார்மாநில செயலாளர் .
.கோவிந்தராஜுலு தலைமை வகித்தார்

கூட்டத்தில், "திருச்சி காந்தி மார்க்கெட் அனைத்து காய்கனி வியாபாரிகள் ஐக்கிய நலச்சங்கம்' என்ற பெயரில் புதிய சங்கம் துவங்குவது என முடிவெடுக்கப்பட்டது.

சங்க நிர்வாகிகளாக, தலைவர் ஹனிபா, செயலாளர் ராம்ராஜ், பொருளாளர் ஜெயவேல், துணைத்தலைவர் கருப்பையா, இணைச்செயலாளர் பாபு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

நிர்வாகக்குழு உறுப்பினராக சங்கரன்பிள்ளை, கந்தன், ராமசாமி, பழனிச்சாமி, பாண்டுரங்கன், அரசு, ஷபி ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர்புதிய .

நிர்வாகிகளுக்கு, கோவிந்தராஜுலு வாழ்த்து தெரிவித்தார்.

பேரமைபு மாநில துணைத்தலைவர் சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

**விவசாயிகள் கலக்கம் மா''' விளைச்சல் அதிகரித்தும் போதுமான விலை இல்லை**

லாலாப்பேட்டைகிருஷ்ணராயபுரம் யூனியன் பகுதியில் மாம்பழம் விளைச்சல் : அதிகரித்தும், போதுமான விலை இல்லாததால் விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் யூனியன் பகுதியான, மகாதானபுரம், புதுப்பட்டி, லட்சுமணப்பட்டி, பஞ்சப்பட்டி ஆகிய பகுதிகளில் பரவலாக மா''' சாகுபடி நடக்கிறது . இங்கு, 200 ஏக்கர் நிலப்பரப்பில் மா''' பயிரிடப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் செந்தூரம், குண்டு போன்ற மா''' ரகங்கள் பெருமளவில் பயிரிடப்படுகிறதுசீசனில் தற்போது ., மாபழங்கள் உற்பத்தி அதிகரித்துள்ளதுஓர் . ஏக்கரில் விளைந்துள்ள மாம்பழங்களை, மொத்தமாக வியாபாரிகளிடம், 50 ஆயிரம் முதல் ஒரு, லட்சம் வரை விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளிருந்து மாம்பழம் வரத்து அதிகளவில் இருப்பதால், கரூர் மார்க்கெட்டில் கிலோ, 20 முதல், 30 வரை மாம்பழம் விற்பனை செய்யப்படுகிறதுஇதன்காரணமாக குறைந்த விலைக்கே ., மாம்பழங்களை வியாபாரிகள் விலை கேட்கின்றனர்இதனால் ., சாகுபடி செய்த செலவாது தேறுமா, விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**விவசாய கண்காட்சி துவக்கம்**

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் நேற்று துவங்கிய விவசாய கண்காட்சி ஜூன் 9ம் தேதி வரை நடக்கிறது.திண்டுக்கல் தரகுமண்டி குமாஸ்தாக்கள் கல்யாண மண்டபத்தில் விவசாய கண்காட்சி நேற்று துவங்கியது. விதை முதல் விற்பனைவரையும், உழவு முதல் அறுவடை வரையும், விளைபொருட்களின் நேரடி சந்தை வாய்ப்பு, தொழில்நுட்ப இயந்திரங்களின் செயல்முறை, நிழல்வலை, நிலப்போர்வை, நீர்க்குட்டை விவசாயம், அரசு மானிய தகவல்கள் மற்றும் கருத்துரைகள் வழங்கப்படுகின்றன.நவீன டிராக்டர்கள், சோலார் மூலம் நீர்பாய்ச்சுதல், ரிமோட் மூலம் மோட்டார் இயக்கம், ஒட்டுரக தேங்காய், மழைநீர் சேகரிப்பு, வேப்பம் புண்ணாக்கு உரம் உட்பட பலவகை இயற்கை உரங்கள் தயாரித்தல், சொட்டு நீர் பாசனங்கள், விதை சான்றிதழ், தோட்டக்கலை மூலம் சலுகைகள், மானியங்கள் குறித்தும் கண் காட்சியில் விளக்கப்பட்டது.கலெக்டர் வெங்கடாசலம் துவக்கி வைத்தார். விவசாய இணை இயக்குனர் சம்பத், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் சந்திரசேகர், காஜா மைதீன் உட்பட பலர் பங்கேற்றனர்.

**பருவ மழையை எதிர்நோக்கி பணி**

வடமதுரை:வடமதுரை ஒன்றியத்தில் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டம் -2ன் கீழ் பணிகள் நடந்து வருகிறது.அய்யலூர், கருவார்பட்டி, கிணத்துப்பட்டி, அ.கோம்பை, பாலக்குறிச்சி, பிலாத்து, கம்பிளியம்பட்டி, கெச்சானிப்பட்டி, தென்னம்பட்டி, பெரும்புள்ளி ஆகிய 10 நீர்வடிப்பகுதிகள் தேர்வு செய்யப்பட்டது. 5 ஆண்டுகளில் ஆறு கோடி ரூபாய் செலவிடும் இத்திட்ட பணி, தற்போது பிலாத்து ஊராட்சி ஆண்டிக்குளம் பகுதியில் நடக்கிறது. பருவ மழையின் போது, விளை நிலங்களில் மழை நீர் சேமிக்க வசதியாக மண் வரப்பு அமைக்கும் பணி ஜரூராக நடக்கிறது. இதுதவிர இத்திட்டத்தின் கீழ், பண்ணை குட்டை அமைத்தல், சிறு ஓடைகளில் தடுப்பணைகள், சுய உதவிக்குழுக்களுக்கு தொழில் பயிற்சி, சுழல் நிதி வழங்கி பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுதல் போன்ற பணிகளும் செய்யப்படுகிறது.

**விவசாயிகள் வறட்சி நிவாரணம் இலக்கை எட்டுவதில் சிரமம்**

வேடசந்தூர்:விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவதில் இலக்கை எட்ட வேடசந்தூரில் சிரமம் ஏற்பட்டுள்ளது.தமிழக அரசு வறட்சி நிவாரணத்தை

விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. பல இடங்களில் முறையாக நிவாரணம் வழங்க வில்லை என போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் வேடசந்துார் தாலுகாவில் பல கிராமங்களில் வறட்சி நிதியை பெற விவசாயிகள் ஆர்வம் காட்ட வில்லை என கூறப்படுகிறது. இதனால் கிராம நிர்வாக அலுவலர்கள் மேல் அதிகாரிகளின் குறியீட்டு அளவை ,எட்ட முடியாததால் சிரமம் அடைகின்றனர். அதிகாரிகள் உடனடியாக வழங்க உத்திரவிட்டுள்ள நிலையில், விவசாயிகள் வாங்காததால் அவதிப்படுகின்றனர். வீடு வீடாக வழங்க கூறினால் கூட சென்று வழங்கி விடுவோம், சொல்லி அனுப்பியும் வராத நிலையில் என்ன செய்வது என அதிகாரிகள் கூறுகின்றனர். விவசாயிகள் சிலர் கூறுகையில்,""தற்போது பெறப்பட்ட பட்டா நகல், போட்டோ, அடையள அட்டையை கேட்கின்றனர். இந்த ஆவணங்களை பெற அலைய வேண்டியுள்ளது. நிலம் உள்ள விவசாயிகளுக்குதான் வழங்குகிறார்கள். இதற்கு மனுவில் போட்டோ ஒட்டி கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களில் பெற வேண்டியுள்ளது. அங்கு அடையாள சான்று சமர்ப்பித்து பெறும் நிலையில் கிராம நிர்வாக அலுவலரே பட்டா எண்ணையும் குறித்த கொடுத்து விட்டால் விவசாயிகள் பயனடைவர்,"என்றனர்.

**வைகை அணை பண்ணையில் 25 லட்சம் மீன் குஞ்சுகள்**

ஆண்டிபட்டி:வைகை அணை மீன் பண்ணையில், 25 லட்சம் மீன் குஞ்சுகள் வளர்ப்புக்காக தொட்டிகளில் விடப்பட்டுள்ளன.மழை சீசனில், அணைகளில் உள்ள நீர் தேக்கத்தில் விடுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் லட்சக்கணக்கான மீன் குஞ்சுகள் வளர்க்கப்படும். பவானிசாகர், மேட்டூர் அணைகளில் இருந்து மீன் குஞ்சுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. கடந்த மாதம் 5 லட்சம் ரோகு வகை, 7 லட்சம் மிருகாள் வகை, 13 லட்சம் கட்ளா வகை மீன் குஞ்சுகள் தொட்டிகளில் விடப்பட்டுள்ளன.மீன் குஞ்சுகளுக்கு கருக்கால் தவிடு, கடலை பிண்ணாக்கு ஆகியவை உணவாக கொடுக்கப்பட்டு பராமரிக்கப்படுகிறது. தொட்டிகளில் விடப்பட்ட நுண்மீன் குஞ்சுகள் 60 நாட்களுக்கு பிறகு விரலிகளாக வளர்ந்து விடும். பின் இவற்றை பக்குவமாக பிடித்து வைகை அணை, பரப்பலாறு அணை, விழுப்புரம் கோமுகி அணை, மஞ்சளாறு, சண்முகாநதி ஆகிய இடங்களில் உள்ள நீர் தேக்கங்களில் விடப்படும். மழைக் காலங்களில் நீர் தேக்கங்களில் வளரும் மீன்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு பிறகு பிடிக்கப்படும் என்று மீன் வளத்துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

**மின்சப்ளை இல்லாமல் விவசாயம் பாதிப்பு**

தேனி:மின்சப்ளை இல்லாமல் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக கோவில்பாறை கிராம விவசாயிகள் புகார் கூறியுள்ளனர்.இவர்கள் கலெக்டரிடம் கொடுத்துள்ள மனு: கடமலைக்குண்டு ஒன்றியம், தங்கம்மாள்புரம் ஊராட்சி கோவில்பாறையில் 300 வீடுகளுக்கு மின் இணைப்பும், இப்பகுதியில் உள்ள மோட்டார் பம்ப் செட்களுக்கும் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. அதிக மின்பளு காரணமாக ஒருநாள் விட்டு ஒருநாள் மட்டுமே மின்சப்ளை செய்யப்படுகிறது. இதனால் விவசாய பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது. தோட்டப்பயிர்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி உள்ளன. எனவே இப்பகுதியில், சப்ளையை சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என கோரியுள்ளனர்.

**இழப்பீட்டு கணக்கில் விடுபட்ட நிலங்கள் நிவாரணம் வழங்க விவசாயிகள் கோரிக்கை**

இளையான்குடி:சாத்தனூர் குரூப்பில் வறட்சி நிவாரணம் வழங்குவதற்காக கணக்கீடு செய்ததில்,பயிர் செய்த விவசாய நிலங்கள் விடுபட்டு போனதால் , வறட்சி நிவாரணம் பெற முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். சாத்தனூர் குரூப்பில் சாத்தனூர்,வாணியங்குடி , செலுகனேந்தல்,பூலாங்குடி, ஆகிய கிராமங்கள் உள்ளது.இக்கிராமங்களை சேர்ந்த விவசாயிகளுக்கு சாத்தனூர் தொடக்க விவசாய கூட்டுறவு வங்கியில் கணக்கு உள்ளது. இவர்கள் அரசு அறிவித்துள்ள வறட்சி நிவாரணம் பெறச் சென்ற போது , அவர்கள் விவசாயம் செய்த இடங்களில் சில கணக்கீடு செய்யும் போது விடுபட்டுள்ளது. அந்த நிலங்களுக்கு வறட்சி நிதி கிடைக்க வில்லை என விவசாயிகள் புலம்புகின்றனர். சாத்தனூரைச் சேர்ந்த சாத்தையா கூறுகையில் , "" நான் 4 ஏக்கர் 67 சென்டில் விவசாயம் செய்தேன். எனக்கு 3 ஏக்கர் 84 சென்டுக்கு வறட்சி நிதி வழங்கப்பட்டது. மீதி இடம் விடுபட்டு போயுள்ளது " என்றார். வாணியங்குடி கருப்பையா கூறுகையில் , "" நான் இரண்டு ஏக்கரில் நெல் , மிளகாய் விவசாயம் செய்திருந்தேன், 42 சென்டு கணக்கில் விடுபட்டுள்ளதால் அதற்கு வறட்சி நிதி கிடைக்கவில்லை " என்றார். இதே போல் இளையான்குடி தாலுகா முழுவதும் சில கிராமங்களில் வறட்சி நிதி வழங்குவதற்காக கணக்கீடு செய்ததில்,இடங்கள் விடுபட்டுள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர். இளையான்குடி தாசில்தார் பிரேம்குமார் கூறுகையில், "" முறையாக விவசாயம் செய்திருந்தும் , ஏற்கனவே எடுக்கப்பட்ட கணக்கில், விடுபட்ட இடங்கள்

கணக்கெடுத்து பட்டியல் தயாரிக்கப்பட்டு வருகிறது. விடுபட்ட இடங்களுக்கும் வறட்சி நிவாரணம் வந்ததும் கிடைக்கும் " என்றார்.

**வாழையில் வாடல் நோய்: விவசாயிகள் கலக்கம்**

புதுக்கடை : குமரி மாவட்டத்தில் வாடல் நோயினால் வாழை மரங்கள் பாதிக்கப்பட்டு வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.இயற்கை எழில் கொஞ்சும் பகுதியாக குமரி மாவட்டம் விளங்கி வருகிறது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று காட்சியளிக்கும் நெற்பயிர்களும், வானுயர்ந்த தென்னை மரங்களும், மெல்ல தன் இலைகளை அசைத்து ஆடும் வாழை மரங்களும், இயற்கையின் அழகை பறைசாற்றுகின்றன. குமரியில் இயற்கை அளித்த சீதனங்களாக மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள் ஏராளம் விளைந்து வருகிறது. குமரியை பொறுத்தவரை மக்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்களிலும் முக்கனிகளைப் பயிரிடுகின்றனர். இதில், முக்கனிகளில் முதலிடத்தைப் பிடிக்கும் மாங்கனிகளில் செங்கவரிக்காய், நீல ஒட்டு, மயிலாப்பூர், புளிச்சி மாங்காய் என ஏராளமான ரகங்கள் உள்ளன. அதுபோல் பலாவில் வரிக்கைப்பலா, கூழன், செப்பருத்தி வரிக்கை போன்ற பல ரகங்கள் குமரியில் கிடைக்கின்றன. முக்கனிகளில் முதல் இரண்டு கனி வகைகளையும் விவசாயத்திற்காகப் பயன்படுத்தாமல், தங்கள் தேவைகளுக்கு வீடுகளில் வளர்த்து வருகின்றனர். முக்கனிகளில் மூன்றாம் இடம் வகிக்கும் வாழையை, குமரி மக்கள் விவசாய நோக்கில் பயிரிட்டு வருகின்றனர். குமரி மாவட்டத்தில் ராஜாக்கமங்கலம், ஈத்தாமொழி, சுசீந்திரம், தென்தாமரைகுளம், சுங்கான்கடை, கொட்டாரத்து ஏலா, அம்சி ஏலா, கிள்ளியூர் ஏலா உட்பட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்களில் வாழை பயிரிடப்படுகிறது.

இதில், ஏத்தன், துளுவன், வெள்ளைத்துளுவன், பூங்கதளி, ரசகதளி, மோரீஸ், மட்டி, சிங்கன், பாளையன்கோட்டான் ஆகிய வகைகள் முக்கியமானவை ஆகும். முக்கனிகளில் மூன்றாம் இடத்தை பிடித்தாலும், வாழைபழத்தில் சத்தும், சுவையும் அதிகம் உள்ளதால் மவுசு அதிகம் உள்ளது. இதில், முற்றிய நிலையில் உள்ள ஏத்தன் காயில் இருந்து சிப்ஸ் தயாரிக்கப்படுகிறது. மிகச்சிறந்த நொறுக்குத் தீனியாக உள்ள சிப்சுக்கு, இந்தியா முழுவதும் கிராக்கி அதிகம் உள்ளது. தற்போது, குமரி மாவட்டத்தில் ஒரு கிலோ சிப்ஸ் 260 ரூபாய் வரை விற்கப்படுகிறது. மேலும், குமரி மாவட்டத்தில் விருந்தாளிகளுக்குச்

செந்துளுவன் பழம் கொடுத்து உபசரிக்கும் பழக்கம் உள்ளது. திருமணம் மற்றும் விழாக்களில் கட்டப்படும் அலங்கார வளைவுகளில், குலைகளுகள் கூடிய வாழைமரங்களின் பங்கு மிக முக்கியமானதாகும். திருமண காலங்களில் சராசரியாக ஒரு குலை ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. இப்படி திருமண வீடுகளுக்குக் கொடுப்பதற்கு என்றே அம்சி, தொழிக்கோடு, பத்தறை, விழுந்தையம்பலம் போன்ற பகுதிகளில் செந்துழுவன் வாழைகள் அதிகம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வாழையில் மட்டிப்பழம் குழந்தைகளுக்கு மிகவும் நல்லது என கூறப்படுகிறது. குமரியில் விளையும் சுவை மிகுந்த மட்டிப்பழத்திற்கு, வெளி மாவட்டங்களில் அதிக வரவேற்பு உள்ளது.சிங்கன் பழம் ‹ட்டைத் தணிக்கும் பழமாக உள்ளது. மோரீஸ், ரசகதளி போன்ற பழங்களும் சுவை மிகுந்தவை. வாழைப்பழங்களைச் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பிச் சாப்பிடுகின்றனர். மேலும், வாழையின் பூக்கள் மற்றும் தண்டுப் பகுதிகள் சிறுநீரக நோய்களுக்குச் சிறந்த மருந்தாக பயன்பட்டு வருகிறது. மேலும், வாழை இலையின் பயன்பாடும் அதிகமாக உள்ளது. வாழைப்பூ ஒன்று 8 ரூபாய் வரையும், ஒரு வாழை இலை 3 ரூபாய் வரையும் விற்கப்படுகிறது. இவ்வாறு வாழையில் உள்ள ஒவ்வொரு பொருளும் பயன்படுவதால் வாழைமரங்களின் தேவை மிக அதிகமாக உள்ளது. வாழைப்பழங்களுக்கு இந்தியா உட்பட வெளிநாடுகளிலும் மவுசு அதிகமாக உள்ளது. இதைக் கருத்தில் கொண்டு, குமரி மாவட்ட விவசாயிகள், மிக முக்கிய பயிராக வாழையை விவசாயம் செய்து வருகின்றனர். ஆனால், குமரி மாவட்டத்தில் வாழை விவசாயிகளுக்கு அனுதினமும் சோதனை தான் காத்திருக்கிறது. அக்னி நட்சத்திரம் அடிக்கும்போது குமரியில் வெயில் கோர தாண்டவம் ஆடியது. இதில், விவசாயிகள் பலர் நஷ்டத்தை சந்தித்தனர். வறட்சியைத் தொடர்ந்து மழையுடன் கூடிய பலமான காற்று வீசியது. இதில், மாவட்டத்தின் பல பகுதிகளிலும் வாழைமரங்கள் சேதமடைந்தன. மேலும், தற்போது பல இடங்களில் வாழைகளில் வாடல் நோய் தாக்கி உள்ளது. இதனால், விவசாயிகள் மிகவும் கவலை அடைந்துள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**07.06.2013 A.M**

---

**நாவல் பழ சீசன் துவங்கியது**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் நாவல் பழம் சீசன் துவங்கியுள்ளது. தற்போது நாவல் பழம் கிலோ கி160க்கு விற்பனை செய்யப்படுகிறது. துவர் ப்பும் இனிப்பும் கலந்த சுவை மிகுந்த பழம் நாவல்பழம். தமிழகம், ஆந்திராவில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் ஜூன் முதல் நாவல் சீசன் துவங்குகிறது. வழக்கம் போல் இந்த ஆண்டும் கடந்த 2 நாட்களாக தர்மபுரி மார்க்கெட்டிற்கு நாவல் பழங்கள் விற்பனைக்கு வந்துள்ளன. ஆந்திரா மாநிலம் குண்டூர் பகுதியில் இருந்து தினமும் 1 டன் பழங்கள் தர்மபுரிக்கு வர ஆரம்பித்துள்ளது. கிலோ கி160க்கு விற்பனை செய்யப்படுகிறது. இம்மாத இறுதியில் வரத்து அதிகரித்து, விலை குறையும் என வியாபாரிகள் தெரிவித்தனர். நாவல் பழம் சாப்பிடுவதன் மூலம் பான்கிரியாஸ் எனும் சுரப்பியை தூண்டி இன்சுலின் சுரக்க வைக்கிறது. இதே போல் நாவல் கொட்டையை அரைத்து பவுடராக்கியும் சர்க்கரை நோயாளிகள் மருந்தாக பயன்படுத்துகின்றனர். மருத்துவ குணங்கள் இருப்பதால் நாவல் பழங்களை பலரும் விரும்பி சாப்பிடுகின்றனர். தர்மபுரி நகரில் நாவல் பழ விற்பனை கனஜோராக நடந்து வருகிறது.

**பப்பாளி சாகுபடியில் ஏக்கருக்கு ரூ.2 லட்சம் லாபம் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

சிவகங்கை: சிவகங்கை பகுதி விவசாயிகள் பப்பாளி சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகின்றனர். பப்பாளி சாகுபடியில் ஏக்கருக்கு ரூ.2லட்சம் வரை லாபம் கிடைப்பதாக கூறுகின்றனர். பலராலும் விரும்பி உண்ணும் பழமாக பப்பாளி உள்ளது. சிவகங்கை பகுதியில் சுமார் 50 ஏக்கரில் பப்பாளி சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதில் ஆண்,

பெண் என இருவகை உண்டு. இரு பாலினமும் கொண்ட ரகங்களும் உண்டு. கோ3, கோ7 போன்ற ரகங்கள் இருபாலினமும் கொண்டவை. பப்பாளி பால் எடுப்பதற்கு கோ2, கோ5, கோ6 ரகங்கள் ஏற்றவை. 2 வயதுடைய பப்பாளியை ஆண்டு முழுவதும் பயிரிடலாம். ஒரு ஹெக்டேரில் பயிரிட அரை கிலோ விதை தேவைப்படும். விதையை 2கிராம் பவிஸ்டின் மருந்து கொண்டு நேர்த்தி செய்ய வேண்டும். பின்னர் தொழுஉரம், மண் நிரம்பிய பாலித்தீன் பைகளில் ஒரு செமீ ஆழத்தில் விதைக்க வேண்டும். ஒரு பைக்கு 4 விதைகள் வீதம் ஊன்றி நிழல்படும் இடத்தில் வைத்து பூவாளி மூலம் நீர் ஊற்ற வேண்டும்.

ஒரு பைக்கு ஒரு கிராம் வீதம் கார்போபியுரான் 3 கிராம் குருணை மருந்து இட்டு நூற்புழு தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். 60 நாள் நாற்றுகளை 1.8 மீ இடைவெளியில் நட வேண்டும். ஒரு குழிக்கு தலா 45 செமீ நீளம், அகலம் மற்றும் ஆழம் தேவைப்படும். பப்பாளி செடியை சுற்றி தண்ணீர் தேங்காமல் பார்த்து கொள்ள வேண்டும். 6 மாதங்களில் பப்பாளி பூத்து காய்க்க துவங்கும். 9 மாதத்தில் பப்பாளி பழத்தை அறுவடை செய்யலாம். பப்பாளி பாலை விளக்கெண்ணையுடன் கலந்து குடித்தால் வயிற்று பூச்சிகள் ஒழியும். வாய், நாக்கு, தொண்டையில் ரணம் ஏற்பட்டால், பப்பாளி பாலை தடவலாம். பப்பாளி காயை சமைத்து உண்டால் உடல் எடை குறையும். தாய்ப்பால் பெருகும். தினந்தோறும் ஒரு துண்டு பப்பாளி சாப்பிட்டு வந்தால் கல்லீரல், மண்ணீரல் வீக்கம் குறையும். செரிப்பு தன்மை அதிகரிக்கும். மலச்சிக்கல், சிறுநீர் பாதை அழற்சி சீராகும்.

இதுகுறித்து கன்னிமார்பட்டி விவசாயி ராதா கூறுகையில், ‘1.30 ஏக்கரில் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ஒரு ஏக்கருக்கு ஆயிரம் கன்றுகள் வரை நடலாம். ரூ.1.5 லட்சம் வரை செலவு செய்தேன்.
9 மாதங்களுக்கு பிறகு 8 நாட்களுக்கு ஒரு முறை 3 டன் வரை அறுவடையாகும். ஒன்றரை வருடம் வரை பப்பாளி அறுவடை செய்யலாம். ஒரு கிலோ பப்பாளி ரூ.6 வரை விற்கப்படுகிறது. விற்பனைக்காக மதுரைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு செலவு போக ரூ.2 லட்சம் வரை லாபம் கிடைக்கும். பப்பாளியை வைரஸ் நோய் தாக்காமல் பார்த்து கொள்ள வேண்டும். அந்நோய் தாக்கினால் காப்பாற்ற முடியாது.

அதேபோல் காற்றும் அதிகமாக அடிக்க கூடாது. அதிக லாபம் கிடைப்பதால் பப்பாளியை சாகுபடி செய்து வருகிறோம்' என்றார்.

**வறட்சி நிவாரணத்தில் குளறுபடி : அதிர்ச்சியில் விவசாயிகள்**

சிவகங்கை: தேவகோட்டை பகுதியில் வறட்சி நிவாரணத்தில் ஏக்கருக்கு ரூ.5ஆயிரம் வழங்காமல், வெறும் ரூ.3ஆயிரம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

சிவகங்கை வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, ரூ.75 கோடி நிவாரணத் தொகையாக ஒதுக்கப்பட்டுள்ளது. தற்போது நிவாரணத் தொகை விஏஓக்கள் மூலம் சரிபார்க்கப்பட்டு, கூட்டுறவு வங்கிகள் மூலம் அளிக்கப்பட்டு வருகின்றன. தேவகோட்டை தாலுகா குருந்தனக்கோட்டை குரூப், கற்களத்தூர் குரூப் கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு அரசூர் மற்றும் தோட்டமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அரசு அறிவித்தபடி, ஒரு ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் நிவாரணமாக வழங்க வேண்டும். ஆனால் அப்பகுதி விவசாயிகளுக்கு ஏக்கருக்கு வெறும் ரூ.3 ஆயிரம் மட்டுமே நிவாரணமாக வழங்கப்பட்டு வருகிறது. இதுகுறித்து வருவாய்த்துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் முறையிட்டும் நடவடிக்கை இல்லை.

இதையடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் இந்திய கம்யூ. ஒன்றியச் செயலாளர் சந்திரன், முன்னோடி விவசாயி ஆபிரகாம் தலைமையில் சிவகங்கை கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்திருந்தனர். பின்னர் அவர்கள் கூறுகையில், 'எங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையில் குளறுபடி ஏற்பட்டுள்ளது. விஏஓ முறையாக கணக்கெடுக்கவில்லை. அரசு அறிவித்தப்படி ஏக்கருக்கு ரூ.5ஆயிரம் வழங்க வேண்டும்' என்றனர்.

## வைகை ஆற்றில் நீர்வரத்து குறைகிறது : விவசாய பணிகள் பாதிப்பு

வருசநாடு: நீர்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்வது நின்றுவிட்டதால் வைகை ஆற்றில் ஏற்பட்டிருந்த நீர்வரத்து குறைந்து கொண்டே வருகிறது. இதனால் விவசாய பணிகள் பாதிக்கும் அபாயம் உருவாகியுள்ளது.தேனி மாவட்டம், கடமலைமயிலை ஒன்றியத்தில் வைகை ஆறு உற்பத்தியாகி ஓடுகிறது. கடந்த சில நாட்களாக பெய்த மழை காரணமாக பலமாதங்களாக வறண்டு காணப்பட்ட வைகை ஆற்றில் நீர்வரத்து ஏற்பட்டது. தொடர்ந்து 15 நாட்களாக நீர்பிடிப்பு பகுதிகளில் தினமும் மழை பெய்து வந்ததால்வைகை ஆற்றில் குறிப்பிட்ட அளவு தண்ணீர் வந்து கொண்டே இருந்தது. கடந்த சில நாட்களாக மழை ஏதும் பெய்யாத நிலையில் வைகை ஆற்றில் வந்த நீரின்அளவு படிப்படியாக குறைந்தே வருகிறது. இதேநிலை நீடித்தால் இன்னும் சில நாட்களில் நீர்வரத்து அடியோடு வறண்டு போகும் அபாயம் உள்ளது. இதற்கிடையே பருவமழையை நம்பி விவசாயம் செய்த விவசாயிகள் மழை நின்றுவிட்டதால் கவலையடைந்துள்ளனர். மேலும் பயிர்களை காப்பாற்ற முடியாமல் பரிதவித்து வருகின்றனர். மழை பெய்வது அடியோடு நின்றுவிட்ட நிலையில் கடமலைமயிலை ஒன்றிய பகுதிகளில் கடந்த சில தினங்களாக இரவில் கடும் குளிர் நிலவுகிறது. இதனால் தென்மேற்கு பருவமழை தொடர்ந்து பெய்யுமா என்ற அச்சம் இப்பகுதி விவசாயிகளிடையே எழுந்துள்ளது. அதேநேரத்தில் கடந்த சில வாரங்களாக பெய்த தொடர் மழையின் காரணமாக இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் ஓரளவு உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## காய்கறி விலை கடும் உயர்வு : மக்கள் பாதிப்பு

வலங்கைமான்: வலங்கைமான் மற்றும் ஏனைய பகுதிகளில் வறட்சியின் காரணமாக காய்கறி விலை அதிகரித்துள்ளதால் மக்கள் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். டெல்டா மாவட்டங்களில் போதிய மழை இல்லாததாலும், மேட்டூர் அணை கால தாமதமாக திறக்கப்பட்டு முன்கூட்டி யே மூடப்பட்டதாலும் கடும் வறட்சி நிலவி வருகி றது.

தமிழகத்தில் தற்போது மளிகை பொருட்கள் மட்டுமல்லாது, காய்கறி விலையும் கடுமையாக உயர்ந்து வருகிறது. தற்போது நிலவி வரும் கோடை காலத்தில் காய்கறிகள் மற்றும் பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்ள வேண்டுமென மருத்துவர்கள் கூறி வருகிற நிலையில் காய்கறியின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இதனால் பாரம்பரிய உணவு முறைகள் மறைக்கப்பட்டு திருமணம் போன்ற நிகழ்ச்சியில் கூட சைவ உணவிற்கு பதிலாக அசைவ உணவு வழங்கும் நிகழ்வு வேகமாக பரவி வருகிறது. காய்கறி விலை குறித்து விவசாயிகள் கூறு கையில், வறட்சியின் காரணமாக உற்பத்தி குறை வாக இருப்பது ஒரு புறம் இருக்க, டீசல் போன்ற எரி பொருட்களின் விலை உயர் வால் வாகனங்களின் வாட கை உயர்வை அடுத்து, காய்கறிகளும் விலை உயர்ந்துள்ளது. மேலும் ஆட்கள் கூலி தொகை கூடுதலாக இருப்பதும் காய்கறி விலை உயர்விற்கு காரணமாக உள்ளது.

தற்போது சிறிய வெங்காயத்தின் விலையை கேட்டாலே கண்களில் நீர் வருகிறது. சிறிய வெங்காயம் ஒரு கிலோ ரூ.90 முதல் ரூ.100 வரை விற்கப்படுகிறது. மேலும் ஒரு கிலோ 10 முதல் 20 ரூபாய்க்கு விற்கப்படும் தக்காளி கிலோ 60 முதல் 75 ரூபாய் வரை விற்கப்படுகிறது. கிலோ 10 ரூபாய்க்கு விற்கப்படும் பச்சை மிளகாய் கிலோ 50 முதல் 60 வரை விற்கப்படுகிறது. இஞ்சி ஒரு கிலோ 250 முதல் 300 வரை தற் போது கிராமங்களிலேயே விற்கப்படுகிறது. காய்கறி உற்பத்தி செய்பவரை விட இடைத் தரகர்களே அதிக லாபம் பெறுகின்றனர். மேலும் போக்குவரத்து செலவிற்கு கூடுதல் செலவாகிறது. பஸ் கட்டண உயர்வு, வாகனங்களின் வாடகை உயர்வு, உற்பத்தி குறைவு, மின்தட்டுப்பாடு போன்ற காரணங்களால் நுகர்வோர் மிகவும் பாதிப்படைந்துள்ளனர். கடந்த ஆட்சியில் இடைத் தரகர்கள் இன்றி குறைந்த விலையில், சரியான எடையில் குறைவான விலையில் நுகர்வோர் பயன்பெறும் விதமாக அனைத்து பகுதிகளிலும் நூற்றுக் கணக்கான உழவர் சந்தைகள் திறக்கப்பட்டன. தற்போது பல இடங்களில் உழவர் சந்தைகள் பெயரளவிலேயே நடைபெறுகிறது. சில இடங்களில் உழவர் சந்தைகளுக்கு மூடுவிழா நடத்தப்பட்டு வருகிறது. எனவே அரசு நுகர்வோர் கள் குறைந்த விலையில் காய்கறிகள் வாங்கும் விதமாக காய்கறிகள் ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கு கட்டண சலுகை வழங்க வேண்டும். அதேபோல் அரசு பேருந்துகளில் காய்கறிகளுக்கு

சுமை கட்டணத்தை குறைக்க வேண்டுமென பொதுமக்கள் விரும்புகின்றனர். மேலும் தோட்டக்கலை துறை மூலம் ஊராட்சிக்கு தோட்டப்பயிர்கள் சாகுபடி யை ஊக்குவிக்கும் விதமாக புதிய வழிமுறைகளை வழங்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## வேளாண் படிப்பில் சேர மாணவர்களுக்கு அழைப்பு

தஞ்சை: வேளாண் பட்டயப் படிப்பில் சேர மாணவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தஞ்சை காட்டுத்தோட்டம் மண் மற்றும் நீர் மேலாண்மை வேளாண் கல்வி நிலைய முதல்வர் செங்குட்டுவன் தெரிவித்துள்ளது:

கோவையிலுள்ள தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் அதன் கீழ் இயங்கும் 8 ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் 4 தனியார் இணைப்பு கல்வி நிலையங்களில் 2 ஆண்டு வேளாண் பட்டயப்படிப்பை நடத்தி வருகிறது. வேளாண் பட்டயப்படிப்பு (விவசாயம்) படிப்பதற்கு 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பொதுக்கல்வி பிரிவில் இயற்பியல், வேதியி யல், உயிரியல் அல்லது இயற்பியல், வேதியியல், தாவரவியல், விலங்கியல் பயின்றிருக்க வேண்டும். தொழிற்கல்வி பிரிவில் உயிரி யல் மற்றும் வேளாண் செயற்முறை பாடங்களை பயின்றிருக்க வேண்டும். இந்த பட்டயப்படிப்பு முடித்தவர்களுக்கு உடனடி வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின்கீழ் இயங்கும் சுப்பிரமணியம் வேளாண் கல்வி நிலையம், எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலையம், திண்டிவனம் (04147 250293), எம்.எஸ்.சுவாமிநாதன் வேளாண் கல்வி நிலையம், வேளாண் ஆராய்ச்சி நிலை யம், பவானிசாகர் (04295 240032), வேளாண் ஆராய் ச்சி நிலையம், மண்டல ஆராய்ச்சி நிலை யம், அருப்புக்கோட்டை (04566 220562), வேளாண் கல்வி நிலையம், நெல் ஆராய்ச்சி நிலையம், அம்பாசமுத்திரம் (04634 255424, 250215).

வேளாண் கல்வி நிலையம், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், பேச்சிப்பாறை, கன்னியாகுமரி மாவட்டம் (04651 281191), வேளாண் கல்வி நிலையம், வேளாண் ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி (04632 220533), வேளாண் கல்வி நிலையம், மண்

மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையம், தஞ்சை (04362 267680), வேளாண் கல்வி நிலையம் மற்றும் மாநில வேளாண் விரிவாக்க மேலாண்மை நிலையம், குடிமியான்மலை (04339 241211).

பல்கலைக்கழகத்தோடு இணைந்த தனியார் கல்வி நிறுவனங்களான சகாயத்தோட்டம் வேளாண் கல்வி மற்றும் ஊரக வளர்ச்சி நிலையம், தக்கோலம், வேலூர் மாவட்டம் (96887 11038), தந்தே ரோவர் வேளாண் கல்வி மற்றும் ஊரக வளர்ச்சி நிலையம், பெரம்பலூர் (04328 291066, 325096), வாணவராயர் வேளாண் கல்வி நிலையம், பொள்ளாச்சி, கோவை மாவட்டம் (04253 290147, 127) மற்றும் ஆதிபராசக்தி வேளாண் கல்வி நிலையம், கலவை, வேலூர் மாவட்டம் (04173 295050) ஆகிய கல்வி நிலையங்களில் வேளாண் பட்டயப்படிப்பு நடைபெற்று வருகிறது. இப்படிப்பிற்கான விண்ணப்பப் படிவங்கள் வரும் 24ம் தேதி வரை வழங்கப்படும். வேளாண் பட்டப் படிப்பிற்கான விண்ணப்பங்களை தஞ்சை காட்டுத்தோட்டம் மண் மற்றுமϕ நீர் மேலா ண்மை ஆராய்ச்சி நிலையத் தில் (ஓசி பிசி ரூ.200, எஸ்.சி எஸ்டி ரூ.100) நேரடி யாக பெறலாம். விண்ணப்பதாரர் சாதி சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு மண் மற்றும் நீர் மேலாண்மை வேளாண் கல்வி நிலைய முதல்வர் செங்குட்டுவன் தெரிவித்துள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

07.06.2013 A.M

**ஆண்டிப்பட்டி பகுதியில் கல்லாமை மாங்காய் விளைச்சல் பாதிப்பால் விலை குறைவு விவசாயிகள் கவலை**

கண்டமனூர்

ஆண்டிப்பட்டி பகுதியில் கல்லாமை மாங்காய் விளைச்சல் பாதிப்பால் விலை குறைந்து உள்ளது. ஒரு கிலோ மாங்காய் ரூ.6 முதல் ரூ.8 வரை மட்டுமே விற்கப்படுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

**மாங்காய் விளைச்சல் குறைவு**

தேனி மாவட்டத்தில் பெரிய குளம், போடி நகர் பகுதியை யொட்டி உள்ள மலையடி வாரங்களில் மாந்தோப்புகள் அதிகளவில் உள்ளன. இது தவிர ஆண்டிப்பட்டி தாலுகா வில் கண்டமனூர், கணேச புரம், சித்தார்பட்டி, பாலக் கோம்பை, ஜி.உசிலம்பட்டி, கதிர்நரசிங்கபுரம் உள்பட பல்வேறு கிராமங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் மாந் தோப்புகள் உள்ளன. இந்த மாந்தோப்பு களில் கல்லாமை, காசா, பங்கண பள்ளி, செந்தூரன் உள்பட பல்வேறு வகை மாமரங்கள் உள்ளன.

இந்த தோப்புகளில் உள்ள மாமரங்களில் ஆண்டுக்கு இருமுறை மகசூல் கிடைக்கும். இதில் கோடைக்காலத்தில் ஒரு மகசூலும், பின்னர் தென் மேற்கு பருவமழை காலம் தொடங்கும் போது ஒரு காய்ப்பும் எடுக்கப்படுகிறது. ஆண்டிப்பட்டி தாலுகா பகுதி யில் உள்ள மாந்தோப்பு களில் தற்போது போதிய விளைச்சல் இல்லை.

குறிப்பாக கோடைக்காலத் தில் மழை போதிய அளவு பெய்யாததால் மாங்காய் விளைச்சல் குறைந்துள்ளதாக விவசாயிகள் கவலையுடன் கூறினர். தற்போது மாங்காய் கள் திரட்சி இன்றி விளைச்சல் அடைந்துள்ளதால், கல்லாமை ரக மாங்காய் கிலோ ரூ.6

முதல் ரூ.8 வரையே விற்பனை ஆகிறது. இந்த விலை குறைவால் விவசாயிகள் மிகுந்த அவதிக்குள்ளாகி உள்ளனர்.

**விவசாயிகள் கவலை**

இது குறித்து மா விவசாயி செல்வம் கூறும் போது,' கோடையில் மாங்காய் காய்ப்பு சீசனில் உரிய மழை பெய்யாததால் மாங்காய்கள் திரட்சியின்றி காய்த்துள்ளன. இதன் காரணமாக விலை குறைந்துள்ளது. மேலும் ஒரு ஏக்கருக்கு 10 டன் வரை மாங்காய் மகசூல் அடைந்து கிலோ ரூ.15 என்ற அளவில் விலை கிடைத்தால் தான் விவ சாயி கள் பயன் அடைவார்கள். தற்போது ஏக்கருக்கு 5 டன் அளவில் மாங்காய் மகசூல் மட்டுமே கிடைத்துள்ள நிலை யில், விலையும் குறைந் துள்ள தால் விவசாயிகள் பெருத்த நஷ்டத்தை சந்தித்துள் ளோம்'என்றார்.

**மரங்கள் சூழ்ந்த வடகாடு பகுதியில் கோடை மழை பெய்யாததால் விவசாயிகள் பாதிப்பு ஆய்வு செய்ய கோரிக்கை**

வடகாடு,

மரங்கள் சூழ்ந்து காணப் படும் வடகாடு பகுதியில் கோடை மழை பெய்யாத தால் அப்பகுதி விவசாயி கள் பாதிப்பு அடைந்து ள்ளனர். இதற்கு இயற்கை மாறுபாடு காரணமா என்பதை ஆய்வு செய்ய வேண்டும் என்று அவர் கள் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

மரங்கள் நிறைந்த பகுதி

புதுக்கோட்டை மாவட் டத்தில் வடகாடு, மாங்காடு, புள்ளான்விடுதி, கொத்த மங் கலம், அணவயல் உள் ளிட்ட பகுதிகளில் ஆழ் குழாய் கிணறு மூலம் விவ சாயம் செய் யப்படுகிறது. இப்பகுதிகளில் பல ஆண்டு களாக மரங்கள் வளர்க்கப் படுகின்றன. அதில் மா, தென்னை, பலா மரங்கள் உள்ள தோப்புகள் பராமரிக்கப் படுகின்றன.

மழை இல்லை

இப்பகுதியில் பலா மரங்கள் அதிகமாக இருப்பதாலும், அதன் விளைச்சல் காரண மாகவும் அப்பழங்கள் தமிழக பகுதிகள் மட்டுமின்றி ஆந்திரா, கர்நாடகா போன்ற மாநிலங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் வேம்பு, தேக்கு, பூவரசு, ரோஸ்வுட் உள்ளிட்ட மரங் களும் வளர்க்கப்படுகின் றன. நூற்றுக்கணக்கான ஏக் கரில் மரங்கள் வளர்க்கப் படுகின் றன. இதனால் ஒவ் வொரு ஆண்டும் மழை அதிகமாகவே பெய்துள்ளது. மரம் அதிகரிப்ப தால் மர சந்தையும், மரம் வியாபாரிகளும் அதிகரித்து ள்ளனர். இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆலங்குடி தாலுகாவில் பல இடங்களில் கோடை மழை பெய்தது. இந்த மழையை பயன்படுத்தி அடுத்த சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகின்றனர். ஆனால் வடகாடு உள்ளிட்ட பகுதியில் மழை பெய்யாத நிலை உள் ளது.

விவசாயிகள் அதிர்ச்சி

மரம் நட்டால் மழை பெய்யும் என்பதற்கு ஏற்ப, இந்த பகுதியில் வீட்டுக்கு வீடு மரம் வளர்க்கப்படுகிறது. மேலும், மரங்களை வளர்த்து வனங்களாக மாற்றி வருகின் றனர். இப்படிப் பட்ட சூழ் நிலையில் இப்பகுதி யில் மழை பெய்யாமல், மரம் குறைவாக உள்ள பகுதியிலும், மரங்கள் இல்லாமல் கட்டிடங்கள் மட்டுமே அதிகமாக உள்ள நகர் பகுதிகளிலும் மழை பெய் துள்ளது.
இதனால் விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மேலும், இந்த நிலை நீடித்தால் குடிக்கக்கூட தண்ணீருக்கு பஞ்சம் ஏற்படும் சூழல் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமும் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது.

ஆய்வுசெய்ய கோரிக்கை

இது குறித்து மாங்காட்டை சேர்ந்த விவசாயி வினோத் கூறுகையில், மரங்கள் அதிகமாக வளர்க்கப்படுவ தால் கோடையின் தாக்கம் மற்ற பகுதிகளைவிட இப்பகுதியில் குறைவாகவே இருக்கும். அதற்கு சான்றாகவே மலை பிரதேசங்களில் பயிரிடப்படும் மிளகு இங்குள்ள தோப்புகளில் உள்ள மரங்களில் கொடியாக வளர்க்கப்படுகிறது. குளிர் பிரதேசங்களைப்போலவே இங்கு மிளகு நல்ல விளைச் சலை ஈட்டுகிறது.

அப்படி இருக்க கடந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையும் குறைந்துவிட்டது. அதேபோல, இந்த ஆண்டு கோடைமழை முற்றிலும் இல்லாதிருப்பது எதிர்காலத்தில் குடிநீர்

கிடைக்குமா என்ற அச் சத்தை ஏற்படுத்தி உள்ளது. பருவ நிலை மாற்றம் ஏற்பட்டிருக்க லாமென அச்சம் ஏற்பட்டுள்ள தால், இது குறித்து அரசு விஞ்ஞானிகளை கொண்டு ஆய்வு மேற்கொள்ள வேண்டும். இயற்கை இடற்பாடுகளை போக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார். இதுவே இப்பகுதியினரின் கோரிக்கையாகவும் உள்ளது.

**பெரம்பலூர் மாவட்டத்தில் சிறுதானியம், பயிறு வகை, எண்ணெய் வித்து, பருத்தி பயிர்களுக்கான மானிய விபரம்**

பெரம்பலூர்,

பெரம்பலூர் மாவட்டத் தில் விவசாயிகள் பயிர் செய்ய சிறுதானியம், பயிறுவகை, எண்ணெய் வித்து, பருத்தி பயிர்களுக் கான மானிய விபரங்கள் குறித்து மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது அறிவித்துள் ளார்.

இது குறித்து அவர் வெளி யிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:-

சிறுதானியம் பயிர் சாகுபடி

மக்காச்சோளம் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வீரிய ஒட்டுரக மக்காச்சோள விதைகள் ரூ.12- கிலோ விதைக்கு மானியம் அனு மதிக்கப்பட்டு ஐசோபோம் (மக்காச்சோளம்) திட்டத்தில் வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டத்தில் 5 ஹெக்டர் செயல்விளக்கத்தளைகள் அமைத்திட ரூ.4ஆயிரம் நிதி உதவி வழங்கப்படுகிறது. தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில் மானாவாரி பகுதி விவசாயிகள் உற்பத்தியை பெருக்கிட செயல்விளக்கத் தளைகள் மக்காச்சோளம் -காய்கறி சாகுபடி பயிர் சுழற்சி முறையில் அமைத்திட ஒரு ஹெக்டருக்கு ரூ.5 ஆயிரம்- மானியம் அனுமதித்து 25 சதவீத மானிய விலையில் வீரிய ஒட்டுரக விதைகள், நுண்ணூட்ட சத்துக்கள், ரசா யன உரங்கள்¢, உயிர் உரங்கள் மற்றும் சாகுபடி செலவினங்க ளுக்காக ஒரு ஹெக்டருக்கு ரூ.5 ஆயிரம் மானியம் அனு மதித்து வழங்கப்படுகிறது.

நிதி உதவி

மேலும் நகரும் தெளிப்பான் கள், மழை தூவான்கள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படவும் உள்ளது. பாரம்பரியமாக சாகுபடியி லிருந்து வந்த சாமை, திணை, குதிரைவாலி, சோளம், கம்பு, வரகு, கேழ்வரகு ஆகிய பயிர் களை மீண்டும் சாகுபடிக்கு கொண்டுவர இத்திட்டத்தில் ஒரு ஹெக்டர் செயல்விளக்கத் தளைகள் அமைக்கப்பட உள்ளது சோளம், கம்பு, ராகி செயல்விளக்கத்தளை அமைத் திட ரூ.3ஆயிரம் நிதி உதவியும் வரகு, சாமை, திணை, குதிரைவாலி ஆகிய பயிர்களில் தளைகள் அமைத்திட ரூ.2 ஆயிரம் நிதி உதவியும் வழங்கப் படுகிறது.

பயிறுவகை பயிர் சாகுபடி

நமது மாவட்டத்தில் துவரை, உளுந்து, பாசி பயிறு மற்றும் மொச்சை ஆகிய பயறு வகை பயிர்கள் மொத்த சாகுபடி பரப்பில் 1 சதவீதம் மட்டுமே சாகுபடி செய்யப் பட்டு வருகிறது(1053 ஹெக்டர்). எனவே சாகுபடி பரப்பினை அதிகரித்து பயறுவகை உற்பத்தி பெருக்கிட தேசிய உணவு பாதுகாப்பு திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் பயறுவகை பெருக்கு மாநில திட்டம் ஆகிய திட்டங்களில் சான்று பெற்ற விதைகள் ரூ.12- கிலோ விதைக்கு மானி யம் அனுமதித்து வழங்கப் படுகிறது.

மேலும் விதை உற்பத்தி செய்து வழங்கப்படும் விவசா யிகளுக்கு 1கிலோ விதைக்கு ரூ.10 நிதி உதவியும், இத் திட்டத்தில் ஒன்று அல்லது 2 கிராமங்களில் 100 ஹெக்டர் தொகுப்பாக துவரை, உளுந்து பயிர்களில் செயல்விளக்கத் தளைகள் அமைத்திட 50 சத வீத மானிய விலையில் விதை கள் மற்றும் இதர இடுபொருட் கள் மானிய விலையில் வழங்கப்பட உள்ளது. துவரை நாற்றுவிட்டு நடவு செய்யும் புதிய முறையில் செயல் விளக்கத்தளைகள் அமைத்திட 50சதவீத மானிய விலையில் ரூ.7ஆயிரத்து 500 ஹெக்டருக்கு மானியங்கள் அனுமதித்தும், மேலும் விதைகிராம திட்டத் தில் 50 சதவீத மானிய விலை யில் சான்று பெற்ற விதைகள் வழங்கி விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சியும் வழங்கப்பட உள்ளது.

எண்ணெய்வித்து உற்பத்தி சாகுபடி

மணிலா, எள், சூரியகாந்தி மற்றும் ஆமணக்கு போன்ற எண்ணெய் வித்து பயிர்கள் சாகுபடி நமது மாவட்டத்தில் வெகுவாக குறைந்துள்ளது.மொத்த சாகுபடி பரப்பில் 3.5 சதவீதம் மட்டுமே இப்பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகி றது. எனவே இப்பயிர்களின்

உற்பத்தியை பெருக்கிட ஐசோ போம் எண்ணெய்வித்து திட் டத்தில் 50 சதவீதம் மானிய விலையில் அதிகபட்சமாக ரூ.12- ஒரு கிலோ விதைக்கு மானியம் அனுமதித்து மணிலா விதைகள் வழங்கப் படவுள்ளது.

இத்திட்டத்தில் 5 ஹெக்டர் செயல் விளக்கத்தளைகள் அமைக்கப்படவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 50 சதவீத மானிய விலையில் மணிலா சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஜிப்சம் 400 கிலோஹெக்டர் வீதம் வழங்கப்படும். மேலும் விதை கிராம திட்டத்தில் ஒரு ஏக்கர் சாகுபடி செய்ய 50 சதவீத மானிய விலையில் எண்ணெய் வித்து விதைகள் வழங்கப்படும்.

பருத்தி சாகுபடி

பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி சாகுபடியில் உற்பத் தியை பெருக்கிட பருத்தி மினி மிஷன்-ஐஐ திட்டத்தில் ஒரு ஏக்கர் செயல் விளக்கத் தளைகள் அமைத்தல், பஞ்சு எடுக்கும் கருவிகள் 50 சதவீத மானிய விலையில் வழங்குதல்¢ தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் நுண்ணூட்ட சத்து உரங்கள், பருத்தி பஞ்சு எடுக்கும் கருவி கள் வழங்கிடவும் துல்லிய பண்ணைய முறையில் பருத்தி சாகுபடி செய்திடவும் நடப் பாண்டில் திட்டங்கள் உள்ளன. இந்த திட்டங்களின் மூலம் அரசு மானியம் பெற்று பயிர் செய்து விவசாயிகள் பயன்பெற வேண்டும்.இவ்வாறு கலெக்டர் தெரி வித்துள்ளார்.

**அமராவதி பாசன வாய்க்கால்களை தூர் வார விவசாயிகள் கோரிக்கை**

கரூர்,

அமராவதி பாசன வாய்க்கால்களை தூர் வார வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத்து உள்ளனர்.

அமராவதி அணை

திருப்பூர் மாவட்டத்தில் அமராவதி அணை உள்ளது. இந்த அணையில் இருந்து வெளிவரும் தண்ணீர் மூலம் கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் அமராவதி ஆற்று நீர் ராஜவாய்க்கால் மூலம் விவசாயத்திற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளது. இதனால் அமராவதி ஆற்றில் தண்ணீர் வரவில்லை.
தற்போது பருவ மழை தொடங்கி உள்ளதால் அமராவதி ஆணைக்கு அதிக அளவு நீர் வந்து கொண்டு உள்ளது. இந்த நிலையில் பாசனத்திற்கு பயன்படுத்தப் பட்டு வரும் ராஜ வாய்க்கால் தூர் வாராமல் உள்ளது.

தற்போது தண்ணீர் வரத்து இல்லாத நேரத்தில் ராஜ வாய்க்காலை தூர் வாரினால், தண்ணீர் வரும் போது கடை மடை பகுதிக்கெல்லாம் விவசாயம் செய்ய தண்ணீர் செல்லும்.

தூர் வார வேண்டும்

எனவே ராஜ வாய்க்கால் உள்பட அமராவதி ஆற்றின் பாசன வாய்க்கால்க¬ள் தூர் வாரி புணரமைக்க வேண் டும்.
மேற்கண்ட தகவலை கரூர் மாவட்ட விவசாயிகள் சங்கத்தினர் ஒரு அறிக்கையில் கூறியுள்ளனர்.

**மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலைக்கு மாத விலை ரூ.15 நிர்ணயம்**

மஞ்சூர்

மஞ்சூர் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலை களில் பச்சை தேயி லைக்கு மாத விலையாக ரூ.15 நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளது.

**தேயிலை தொழிற்சாலைகள்**

நீலகிரி மாவட்டத்தில் 15 கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகள் இயங்கி வருகின் றது. இந்த தொழிற்சாலை களில் உறுப்பினர்களாக இருக் கும் சிறு விவசாயிகள் பச்சை தேயிலையை வினியோகம் செய்து வருகிறார்கள்.

விவசாயிகள் வினியோகம் செய்யும் பச்சை தேயிலைக்கு குன்னூர் இன்கோசர்வ் நிர்வா கம் மாதந்தோறும் விலை நிர்ணயம் செய்து வருகிறது. இதில் கட்டபெட்டு கூட்டுறவு தேயிலை தொழிற் சாலை தவிர மற்ற அனைத்து தொழிற் சாலைகளிலும் மாத விலை நிர்ணயிக்கப்படுகிறது.

**ரூ.15 விலை நிர்ணயம்**

கடந்த மே மாதம் விவ சாயிகள் வினியோகம் செய்த பச்சை தேயிலைக்கு தற்போது மாத விலை நிர்ணயிக்கப் பட்டு உள்ளது. இதன்படி சாலீஸ்பரி, பந்தலூர் ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் பச்சைதேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.16 விலை நிர்ணயம செய்யப் பட்டு உள் ளது. மஞ்சூர், கைக்காட்டி தேயிலை தொழிற்சாலைக ளில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு 15 ரூபாய் மற்றும் கூடுதலாக 50 காசு சேர்த்து, மொத்தம் ரூ.15.50 விலை நிர் ணயம் செய்யப்பட்டு உள் ளது.

பிக்கட்டி, குந்தா (எடக்காடு), கைக்காட்டி, கரும்பாலம்,மகா லிங்கா பிராண்டியர், பிதிர் காடு ஆகிய கூட்டுறவுதேயிலை தொழிற்சாலைகளில் மாத விலையாக ரூ.15 விலை நிர்ண யம் செய்யப்பட்டு உள்ளது. மேலும், இத்தலார், மேற்கு நாடு, கிண்ணக்கொரை, எப்ப நாடு ஆகிய கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.14.50 என விலை நிர்ணயம் செய்யப் பட்டு உள்ளது.

கடந்த 2 மாதங்களில் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.4 வரை விலை வீழ்ச்சி ஏற் பட்டு உள்ளதால் விவசாயிகள் கவலைஅடைந்து உள்ளனர். எனவே, பச்சை தேயிலை விவசாயத்தில் ஈடுபட்டு உள்ள விவசாயிகளுக்கு தமிழக அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

**நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**

ஊட்டி

ஊட்டி தோட்டக்கலை துணை இயக்குனர் மணி விடுத்து உள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள்ளதாவது: நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 21ந் தேதி காலை 10.30 மணிக்கு நீலகிரி மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமையில் நடைபெற உள்ளது. நீலகிரி மாவட்ட விவசாயிகள் விவசாயம் சம்பந்தப்பட்ட குறைகள் ஏதேனும் இருப்பின் தோட்டக்கலை இணை இயக்குனர், தபால் பெட்டி எண்.72, ஊட்டி1 என்ற அலுவலக முகவரிக்கு தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கலாம். விவசாயிகள் பொதுவான கோரிக்கைகளை தவிர்த்து தங்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட மற்றும் நீர்ப்பாசனம், இடு பொருட்கள் போன்ற கோரிக்கைகளை மட்டும் மேற்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு நீலகிரி மாவட்ட கலெக்டரால் கேட்டு கொள்ளப் படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**தஞ்சையில் கோடை மழை கொட்டியது விவசாயிகள் மகிழ்ச்சி**

தஞ்சாவூர்

தஞ்சையில் நேற்று திடீரென கோடை மழை கொட்டியது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>கோடைகாலம்</u>

தமிழகத்தில் கோடை காலத்தையொட்டி வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இந்த நிலையில் வெப்பசலனம் காரணமாக ஆங்காங்கே மழை பெய்து வருகின்றது. இந்த நிலையில் தஞ்சை மாவட்டத்தில் கடந்த 3 நாட்களுக்கு முன்பு 4 நாட்களாக மாலை நேரங்களில் தொடர்ந்து மழை பெய்தது.

இந்த தொடர் மழையினால் வெயிலின் தாக்கம் குறைந்து காணப்பட்டது. இந்த நிலையில் கடந்த 2 நாட்களாக மழை இன்றி வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. நேற்று காலை முதலே வெயிலின் தாக்கம் அதிகமாக காணப்பட்டது.

<u>திடீர் மழை</u>

நேற்று மதியம் 3 மணி அளவில் திடீரென வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. இந்த நிலையில் திடீரென மழை பெய்யத்தொடங்கியது. சுமார் 45 நிமிடத்திற்கும் மேலாக இடைவிடாது மழை கொட்டியது. இந்த மழையினால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. திடீரென மழை பெய்தால் வீட்டை விட்டு வெளியே சென்றிருந்தவர்கள் நனைந்தபடியே வீடு திரும்பினர்.

இந்த மழையினால் தஞ்சை கீழ்பாலத்தில் மழை நீர் தேங்கியது. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதே போல் தஞ்சை அண்ணாசிலை பகுதியிலும் மழை நீர் சாலைகளில் பெருக்கெடுத்து காணப்பட்டது. தொடர்ந்து லேசான தூறலுடன் மழை பெய்தது.

விவசாயிகள் மகிழ்ச்சி

தஞ்சை மாவட்டத்திற்கு தற்போது விவசாயிகள் கோடை நெல் சாகுபடி செய்துள்ளனர். இந்த நிலையில் அவ்வப்போது மழை பெய்து வருவது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.